Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, DECEMBER 20, 2022

செவ்வாய்க்கிழமை டிசெம்பர் 20, 2022 | ஒளி: 08 கதிர்: 168 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## சம்பியனானது மெஸ்ஸியின் ஆர்ஜென்டீனா

முழுச் செய்தி P8



## “நிதி வேண்டாம்; நீதியே வேண்டும்”

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவில் போராட்டம்

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் திங்கட்கிழமை (19) காணாமல் போனோருக்கான அலுவலகத்தால் விசாரணை நடவடிக்கை இடம்பெறுவதற்காக காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் ஆணையாளர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் வருகை தந்து பதிவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில், மாவட்ட செயலகம் முன்பாக ஒன்றுகூடிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் விசாரணை நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தொடர்ச்சி P2




## மனிதாபிமான தேவைகள் தொடர்ந்தும் அதிகரிப்பு

அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, இலங்கையில் மனிதாபிமான தேவைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு, திங்கட்கிழமை (19) சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் 2022ஆம் ஆண்டில் மனிதாபிமான தேவைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் வேகமாக அதிகரிக்கும் உணவுப் பாதுகாப்பு நெருக்கடியை எதிர்கொண்டுவரும் இலங்கையில், நான்கு பேரில் ஒருவர் ஏற்கெனவே உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்வதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

FAO Sri Lanka

இலங்கை முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருவதாகவும்,

தொடர்ச்சி P2

## மீண்டும் மாசுபட்டது கொழும்பு, கேகாலை

கொழும்பு, கேகாலை மாவட்டங்களில் காற்றின் தரம் நேற்று (19) மீண்டும் குறைந்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள தரவுகள் தெரிவிக்கின்றன. அதன்படி, கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் காற்றின் தரக் குறியீடு (AQI) 150க்கு மேல் காணப்பட்டதுடன், இப் பகுதிகளில் வசிப்பவர்கள் உடல்நல பாதிப்புகளை சந்திக்க நேரிடும் எனவும்,

தொடர்ச்சி P2



## மஹிந்தவின் கொள்கைகளை மொட்டு நிராகரித்துவிட்டது

■ பா.நிரோஸ்

பொதுத்தேர்தலின் போது ஐக்கிய தேசிய கட்சியைப் புறக்கணிக்க வேண்டுமென நாடு முழுவதிலும் மஹிந்த ராஜபக்ஷ பிரசாரம் செய்தார். அதனை ஏற்றே மொட்டுக்கட்சிக்கு 143 பாராளுமன்ற உறுப்பினர்களை மக்கள் தெரிவு செய்திருந்தனர் எனத் தெரிவிக்கும் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ்,

தொடர்ச்சி P2

பொருளாதார நெருக்கடிக்கு

# தேர்தலே தீர்வு



- ■ ஜனாதிபதி ரணிலால், இந்த நாட்டை மீட்க முடியுமென போலியான பிரசாரங்களை அரசாங்கம் செய்கிறது
- ■ இலங்கை தொடர்பில் எந்த விதமான கலந்துரையாடல்களும் ஐ.எம்.எப் இல் இடம்பெறவில்லை

■ பா.நிரோஸ்

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வைக் காணாது, தேர்தலை நடத்த அவசியமில்லை என அரசாங்கம் கூறுவது தவறென தெரிவிக்கும் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், தேர்தலை நடத்தாது பொருளாதார நெருக்கடிக்கு தீர்வைக் காண முடியாது எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## சஹ்ரானைப் போல தாடி, தலைமுடி வளர்க்கும் பிக்குகள்

பல்கலைக்கழகங்களில் உள்ள பிக்கு மாணவர்கள், சஹ்ரானைப் போல தாடி, தலைமுடி வளர்ப்பதாகவும் இவ்வகையான மாணவர்களை 3 அல்லது 4 வருடங்களின் பின்னர் பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேற்றும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்றும் மிஹிந்தல ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வலவாகஹங்குனவவே தம்மரதன தேரர் தெரிவித்தார்.

புத்தரின் தர்ம சிந்தனைகளைப் பின்பற்றாமல் தலிபான்கள், லெனின் போன்றோரின் கோட்பாட்டை பின்பற்றுவதுபோல பின்பற்றுகின்றனர் என்றார்.

தொடர்ச்சி P2

## ஐஸ் பாவித்தால் ஆயுள் குறையும்

### ஞாபக சக்தியும் குறையும் என்கிறார் வைத்திய நிபுணர்

ஐஸ் போதைப்பொருளைப் பயன்படுத்துவதால் நித்திரை வராது என்றும் ஞாபக சக்தி அதிகரிக்கும் என்றும் போதைப் பொருள் விற்பனையாளர்கள் பொய்களைப் பரப்பி வருவதாகவும் அதைப் பயன்படுத்துவதால் ஞாபகசக்தி குறையும் என்று கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தைகள் நல நிபுணர் டொக்டர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

ஏனைய போதைப் பொருட்களுடன் ஒப்பிடுகையில், ஐஸ் போதைப் பொருள் அதிகளவில் அடிமையாக்கும் திறன் கொண்டது என்றும் அதைப் பயன்படுத்துவோரின் ஆயுட்காலம் நிச்சயம் குறையும் என்றார்.

தொடர்ச்சி P2



## கடற்படைத் தளபதி ஜனாதிபதி சந்திப்பு

புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று (19) முற்பகல் சந்தித்தார். இலங்கை கடற்படையின் 25 ஆவது கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, ஞாயிற்றுக்கிழமை (18) தனது கடமைகளை ஆரம்பித்தார்.

தொடர்ச்சி P2

## பணிப்பெண்களாக அனுப்புவது நிறுத்தப்படும்

### உதவியாளர்களாக அனுப்ப வேலைத்திட்டம்



அடுத்த வருடம் மார்ச் மாதம் முதல், இலங்கையைச் சேர்ந்த பெண் தொழிலாளர்களை வீட்டுப் பணிப்பெண்களாக அனுப்புவது நிறுத்தப்படும் என்று தெரிவித்த தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, சர்வதேச தரத்துக்கு அமைய இலங்கையர்களை உள்நாட்டு உதவியாளர்களாக வெளிநாடுகளுக்கு அனுப்பும் வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

கொழும்பில் திங்கட்கிழமை (19) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

## “புலிகளின் சொத்துகள் எங்களிடம் இல்லை”

### உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் தெரிவிப்பு



தமிழீழ விடுதலைப் புலிகளின் எந்த சொத்துகளும் தம்மிடம் இல்லை என தெரிவித்துள்ள உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன், தமிழீழக் கோரிக்கையை கைவிடவில்லை; ஆனால், இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகளே எப்படியான தீர்வு தங்களுக்கு வழங்க வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## களுத்துறையில் குத்து; ஹங்வெல்லயில் சூடு

### இருவேறு சம்பவங்களில் இருவர் பலி

களுத்துறை மற்றும் ஹங்வெல்ல பகுதிகளில் இடம்பெற்ற இருவேறு சம்பவங்களில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹங்வெல்ல பகுதியில் இனந்தெரியாத நபரொருவர் நடத்திய துப்பாக்கி பிரயோகத்துக்கு இலக்கான வர்த்தகர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார், நேற்று (19) தெரிவித்தனர்.

வர்த்தகரின் உணவு விற்பனை நிலையத்துக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (18) இரவு நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்த வர்த்தகர், பாதுக்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதியை சந்தித்தார் ஹனா சிங்கர்

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் திருமதி ஹனா சிங்கர், தனது பதவிக்காலம் முடிந்து நாடு திரும்பும் நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (19) முற்பகல் சந்தித்தார்.

தொடர்ச்சி P2



சுற்றுலாத்துறை மூலமாக

## 1 பில்லியன் அ.டொலர் வருவாய்

### சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவிப்பு

பல்வேறு நெருக்கடிக்கு மத்தியில் தற்போதைய அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் சுற்றுலாத்துறையானது வளர்ச்சிகண்டு வருவதாகவும், ஜூலை மாதத்தில் இருந்து தற்போது வரையில் சுற்றுலாத்துறை மூலமாக 1 பில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் அந்நியச் செலாவணியை ஈட்டியுள்ளதாகவும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் இலங்கை சுமார் 1.7 பில்லியன் டொலரை பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்ப்பதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# "நிதி வேண்டாம்; நீதியே வேண்டும்"

காணாமல் போனோருக்கான அலுவலகம் ஒரு கண்துடைப்பு நாடகம்; எங்களை ஏமாற்ற இவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள வேண்டாம்; இழப்பீடோ நட்டஈடோ எமக்கு வேண்டாம்; மாறாக, முறையான நீதி விசாரணையே வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களோடு போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு வருகை தந்து கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்த காணாமல் போனோருக்கான அலுவலக ஆணையாளர்கள் பதிவு நடவடிக்கையில் கலந்துகொண்டு உங்கள் விவரங்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுகொண்டனர்.

இதற்கு எதிர்ப்பு வெளியிட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், எங்களை தொடர்ந்தும் ஏமாற்றும் வகையில் பதிவு நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ள வேண்டாம் என வலியுறுத்தியுள்ளனர். அதன் பின்னர் தாம் பதிவு நடவடிக்கை விசாரணை என்பனவற்றை நிறுத்துவதாக தெரிவித்த காணாமல் போனோருக்கான அலுவலக ஊழியர்கள் மீண்டும் மாவட்ட செயலகத்துக்குள் சென்றனர்.

# மனிதாபிமான தேவைகள் தொடர்ந்தும் அதிகரிப்பு

அரசியல் மற்றும் சமூக கொந்தளிப்பால் நிலைமை மோசமடைவதாகவும் 2021ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து விவசாய உற்பத்தி கீழ்நோக்கிய போக்கில் உள்ளதாகவும் கால்நடை வளர்ப்பாளர்கள் விலங்குணவு கிடைக்காமலும் மீனவர்கள் எரிபொருளை பெற முடியாமல் தவிக்கின்றனர்.

இதன் காரணமாக, உள்ளூர் சந்தைகளில் உணவு விநியோகம் சுருங்கி வருவதாகவும் உணவின் விலைகள் உயர்ந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் உதவிகள் 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல், 244,300 பேரை சென்றடைந்துள்ளதாகவும் 51 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்காக நேற்று வரை சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மீண்டும் மாசுபட்டது கொழும்பு, கேகாலை

குறிப்பாக குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் கடுமையான உடல்நல பாதிப்புகளை சந்திக்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கடந்த வாரங்களில் யாழ்ப்பாணம், புத்தளம், பதுளை, பொலனறுவை மாவட்டங்களில் வார இறுதியில் குறைந்த காற்றின் தரம், தற்போது மேம்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தியாவில் இருந்து வெளியேறும் மாசுபட்ட காற்றின் விளைவாக, இலங்கையின் காற்றின் தரம் குறைந்துள்ளது என்பது ஏற்கெனவே உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தலே தீர்வு

சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைமையகத்தில் நேற்று (19) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை இந்த அரசாங்கத்தாலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவாலும் மீட்க முடியுமென போலியான பிரசாரங்களை அரசாங்கம் செய்து வருகிறது. குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாடுகள், தலைவர்களுடன் நெருக்கமான உறவை வைத்திருப்பதாகவும், சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட நிறுவனங்களிடமிருந்து கடன் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் கூறுகிறார்கள்.

**கடன் வழங்கியவர்களிடம் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறினாலும் அதனை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மறுத்திருக்கிறார்**

இவ்வாறான நிலையில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்து 6 மாதங்கள் கடந்துள்ளபோதிலும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து ஒரு டொலரைக்கூட அவரால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. 17 தடவைகள் ஐ.எம்.எப் இலங்கைக்கு உதவியுள்ளபோதிலும் இம்முறை ஒரு டொலரைக்கூட இலங்கைக்குப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஐ.எம்.எப் பணிப்பாளர் சபைக் கூட்டம் வொசிங்டனில் நடைபெறும். அதன் பின்னர் கடன் உதவி டிசெம்பரில் கிடைக்கும் என கூறினார்கள். ஆனால் வொசிங்டனில் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் கூட இலங்கை உள்வாங்கப்படவில்லை. ஏன், இலங்கை தொடர்பில் எந்த விதமான கலந்துரையாடல்களும் கூட அங்கு இடம்பெறவில்லை எனவும் தெரிவித்தார்.

கடன் வழங்கியவர்களிடம் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறினாலும் அதனை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மறுத்திருக்கிறார். கலந்துரையாடல் மாத்திரமே இடம்பெற்றுள்ளதாகவும் ஆளுநர் கூறியதாகவும் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிக்கு முதலில் தீர்வை வழங்கிவிட்டு பின்னர் தேர்தலுக்கு செல்வோம். இப்போது தேர்தல் நடத்துவது அநாவசியமானது என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கூறுகிறார். இது தவறான கருத்து. தேர்தலை நடத்தாது பொருளாதார நெருக்கடிக்கு தீர்வைக் காண முடியாது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண்பதும், தேர்தல் நடத்துவதும் இருவேறு செயற்பாடுகள் என்றாலும் இரண்டையும் ஒன்றாக செய்ய வேண்டும். ஒன்றை விட்டு இன்னொன்றை செய்ய முடியாது எனவும் தெரிவித்தார்.

# சஹ்ரானைப் போல தாடி, தலைமுடி வளர்க்கும் பிக்குகள்

விசேட மற்றும் பொது பட்டம் பெறும் இரு வகையான மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வதாகவும் அவர்களை 3 அல்லது 4 வருடங்களின் பின்னர் பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேற்றும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதே சட்டத்தை பிக்கு மாணவர்களுக்கும் அறிமுகப்படுத்த வேண்டும் என்று கூறிய அவர், சஹ்ரான் என்ற நபர் தாடியுடன் இறந்ததாகவும் அதன் பின்னர் பலர் சஹ்ரானைப் போல தாடி வளர்க்க ஆரம்பித்துள்ளனர்.

பல்கலைக்கழகங்களில் உள்ள பிக்கு மாணவர்கள் மற்றும் பௌத்த துறவிகள், தலைமுடி, தாடியை வளர்க்கத் தொடங்கியுள்ளதாகவும் பௌத்த பாலி பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்கலைக்கழகங்களில் பயிலும் கலைப் பீட பிக்கு மாணவர்கள் தாலிபான்கள் போன்று செயற்படுகின்றனர் என்றார்.

# மஹிந்தவின் கொள்கைகளை மொட்டு நிராகரித்துவிட்டது

மஹிந்தவின் கொள்கைகளை மொட்டுக் கட்சி நிராகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைமையகத்தில் நேற்று (19) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான கூட்டணி தொடர்பில் ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே பேராசிரியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அதிகாரம் எதிர்க்கட்சிகளிடம் இல்லை. அரசாங்கத்திடமே இருக்கிறது. முழு சமூகத்தையும் பயத்துக்குள் தள்ளும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் எனக் கண்டறிய வேண்டும் என்றார்.

நாட்டில் ஐஸ் போதைப்பொருள் பாரிய வர்த்தகமாக உருவாகியுள்ளது. இது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். பேசிக்கொண்டிருப்பதை விட்டு அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். இளைஞர் சமுதாயம் நாசமடைந்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணிகளை அமைப்பது தொடர்பில் இதுவரையில் எந்தவிதமான கலந்துரையாடல்களோ அல்லது தீர்மானங்களோ மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறு செய்வதாக இருந்தால் அது தொடர்பில் ஆழமாக சிந்திக்க வேண்டும்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான மஹிந்த ராஜபக்ஷ, 2020ஆம் ஆண்டுக்கான பொதுத்தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுத்தார். அவரின் குரல் பதிவுகளை மீளக் கேட்க வேண்டும். அனைத்து பிரசாரக் கூட்டங்களிலும் நானும் கலந்துகொண்டிருந்தேன். ஐ.தே.க தொடர்பிலும் ஐ.தே.கவின் தலைவர் தொடர்பிலும் நாம் என்ன கூறினோம்? ஐ.தே.க மற்றும் ஐ.தே.கவின் தலைவர் தொடர்பில் மஹிந்த கடும் வார்த்தைகளைக்கூடப் பயன்படுத்தியிருந்தார்.

ஐ.தே.கவை முழுமையாக புறக்கணிக்க வேண்டும் என்றே நாம் அப்போது கூறினோம். ஐ,தே.கவுக்கும் மொட்டுக் கட்சியின் கொள்கைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளன. பொதுஜன பெரமுனவினர் மனச்சாட்சியுடன் ஐ.தே.கவுடன் கூட்டணி அமைக்க முடியுமா? மஹிந்தவின் வார்த்தைகளை முழுமையாக நம்பி 143 பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பியிருந்தார்கள்.

மஹிந்த ராஜபக்ஷ அன்று கூறிய கருத்துகளுடனேயே நான் இப்போதும் இருக்கிறேன். நாங்கள் இருவரும் ஒன்றாக அமர்ந்து நாடு முழுக்க சென்றிருந்தோம். அன்றுபோல இன்றும் மஹிந்தவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மஹிந்தவின் நிலைப்பாட்டைப் நிராகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# ஐஸ் பாவித்தால் ஆயுள் குறையும்

ஐஸ் போதைக்கு அடிமையானவர்களுக்கு பசி படிப்படியாக குறைவடைவதால் உடல் பலவீனமடைந்து, நோய் எதிர்ப்பு சக்தி குறைவதால், பல்வேறு நோய்கள் தாக்கி அவர்கள் மரணமடைவார்கள் என்றும் வைத்தியர் நினைவூட்டினார்.

இந்தப் போதைப் பொருளால், பிள்ளைகளின் உடல் மற்றும் மனவலிமை பலவீனமடைவதாகவும் அதன் காரணமாக கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

பிள்ளைகளின் மனதை குறித்த போதைப்பொருள் சிதைத்துவிடுவதாகக் குறிப்பிட்ட அவர், பிள்ளைகளின் வெளிச் செயற்பாடுகள் தொடர்பில் பெற்றோர் அவதானம் செலுத்துவது அவசியமானது என்றார்.

# பணிப்பெண்களாக அனுப்புவது நிறுத்தப்படும்

வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களுக்கு வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம், ஓய்வூதியத் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சட்டரீதியில் இலங்கையர்கள் செல்வதை உறுதிப்படுத்தவும், அவர்களின் வருமானத்தை சட்டரீதியாக நாட்டுக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டின் வரலாற்றில் முதல் தடவையாக, 2022 ஆம் ஆண்டில் 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்த பணியாளர்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பதிவுசெய்து வசதிகளை வழங்கியதாகவும் சுட்டிக்காட்டினார்.

# புலிகளின் சொத்துகள் எங்களிடம்...

தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்கக்கூடிய எந்தவொரு முயற்சிகளையும் நாம் வரவேற்கிறோம். தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கான முக்கிய நடைமுறையாக சர்வகட்சி தலைவர் கூட்டத்தைப் பார்க்கலாம். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதில் ஒரு சந்தர்ப்பவாத அரசியலை முன்னெடுக்கிறாரா என்கிற சந்தேகம் எழுவதாகவும் தெரிவித்தார்.

தனியார் வானொலி ஒன்றின் நேர்காணலில் கலந்துகொண்டு அவர் இந்தக் கருத்துகளை தெரிவித்துள்ளார். புதிய அரசியலமைப்பு யோசனைக்கு கடந்த காலத்தில் உலகத் தமிழர் பேரவையும் யோசனைகளை வழங்கியிருந்தது. இவ்வாறான நிலையில் நாம் கூறும் தீர்வுதான் தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென நாம் கூறவில்லை. இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அரசாங்கத்துடன் பேசி கொண்டுவரும் தீர்வை நாம் ஆதரிப்போம்.

இந்தியாவின் பங்களிப்பு இல்லாது கொண்டுவரப்படும் எந்தவொரு தீர்வும் நிலைகொள்ளாது. 70 மில்லியனுக்கும் அதிகமான தமிழர்கள் வாழும் நாடு இந்தியா. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் வரலாற்று தொடர்புகள் உள்ளன. அரசியலமைப்பு மாற்றத்தை ஏற்படுத்தி வழங்கப்படும் தீர்வே நிலையானதாக இருக்கும். இவ்வாறான நிலையில், சுதந்திர தினத்துக்கு முன்னர் இதனை செய்வது சாத்தியமில்லை. ஆனால், இதுவொரு முக்கியமான முயற்சி எனவும் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் எந்தவிதமான சொத்துகளோ அல்லது கப்பல்களோ உலகத் தமிழ் பேரவையிடம் இல்லை. யுத்தம் 2009ஆம் ஆண்டு நிறைவடைந்து 2010ஆம் ஆண்டே உலகத் தமிழர் பேரவை ஸ்தாபிக்கப்பட்டது. எனவே இது தொடர்பில் எங்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் போலியானவை.

தமிழீழக் கோரிக்கையைக் கைவிடவில்லை. ஆனால், சர்வதேசத்தின் முன்னிலையில் இலங்கை தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும். அந்தத் தீர்வு என்னவாக இருக்க வேண்டும் என்பதை இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகளே தீர்மானிக்க வேண்டும். இதற்கு நாம் ஆதரவளிப்போம் என்றார்.

# கடற்படைத் தளபதி ஜனாதிபதி சந்திப்பு

புதிய கடற்படைத் தளபதி, பதவியேற்றதன் பின்னர் சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதியைச் சந்தித்ததுடன், நினைவுச் சின்னம் ஒன்றையும் வழங்கினார். இதேவேளை, புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவை சந்தித்து சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

# களுத்துறையில் குத்து; ஹங்வெல்லயில் சூடு

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான காரணமோ அல்லது துப்பாக்கிச் சூடு நடத்திய நபர்களின் அடையாளமோ தெரியவில்லை என்றும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுத்துறை பஸ் தரிப்பு நிலையத்துக்கு அருகில் கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டதில் காயமடைந்த நபர் சடலமாக மீட்கப்பட்டதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை தெற்கில் வசிக்கும் 30 வயதுடைய ஒருவரே ஞாயிற்றுக்கிழமை (18) மாலை கொல்லப்பட்டுள்ள நிலையில், களுத்துறை, தொடங்கொட பிரதேசத்தை சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே இந்த கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார். இருவருக்குமிடையிலான தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக தெரிவித்த களுத்துறை தெற்கு பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

# ஜனாதிபதியை சந்தித்தார் ஹனா சிங்கர்

ஹனா சிங்கருடன் சிநேகபூர்வமாக உரையாடிய ஜனாதிபதி, இலங்கைக்காக அவர் ஆற்றிய சேவைகளுக்கு நன்றி தெரிவித்ததுடன், அவரது எதிர்கால பணிகளுக்காக வாழ்த்துகளையும் தெரிவித்தார். திருமதி ஹனா சிங்கர், 2018 செப்டெம்பர் 07 ஆம் திகதி முதல் இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட இணைப்பாளராக செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 1 பில்லியன் அ.டொலர் வருவாய்

இந்த ஆண்டு அண்ணளவாக 800,000 சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைக்க இலக்கு வைத்ததாகவும், அந்த இலக்கை நெருங்கியுள்ள நிலையில், முதல் இரண்டு வாரங்களில் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை 30,000 ஐத் தாண்டியுள்ளது. இதன் மூலம் நாட்டிற்குள் நுழைந்த சர்வதேச சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 658,210 ஆக உள்ளது எனவும், டிசெம்பர் 01 முதல் 13 வரையான காலப்பகுதியில், 30,193 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாகவும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் வெளியிடப்பட்ட தற்காலிக தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

டிசெம்பர் மாதத்திற்கான தினசரி வருகையானது இதுவரை சராசரியாக 2,322 ஆக உள்ளதுடன், டிசெம்பர் முதல் வாரத்தில் (01-07) 16,169 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளதாகவும், இரண்டாவது வாரத்தில் இதுவரை (08-13) மொத்தமாக 14,024 பயணிகள் வந்துள்ளதாகவும் வாராந்திர பகுப்பாய்வு காட்டுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.



# ஐ.எம்.எப் கையை விரித்தால் என்ன செய்வது?

மத்திய வங்கியிடம் அடுத்த வருடத்துக்கான பயணத்திட்டம் ஒன்று இல்லை என தெரிவிக்கும் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவரும் எதிர்க்கட்சி எம்.பியுமான ஹர்ஷ டி சில்வா, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வது எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்ட கடனை எவ்வாறு மறுசீரமைப்பது என்பது தொடர்பில் இதுவரையில் இலங்கை முறையான கலந்துரையாடல்களை மேற்கொள்ளவில்லை.




சீனாவிடமிருந்தே நாடு அதிகளவான கடனைப் பெற்றுக்கொண்டுள்ளது. இதில் குறிப்பாக சீனாவின் வங்கி ஒன்றிலிருந்தே அதிக கடன்கள் பெறப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

எனவே இந்த வங்கியிடம் பேசி கடன்களை மறுசீரமைப்பு தொடர்பில் தீர்மானம் ஒன்றுக்கு வரவது அவசியம். நாம் தற்போது சுரங்கத்தின் நடுவில் இருக்கிறோம். இருளில் இருக்கும்போது எந்த பக்கத்திலிருந்து ஒளி வருமென எதிர்பார்க்கும் நிலையே நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர்மட்டக் கலந்துரையாடல் இணக்கப்பாடு டிசெம்பரில் ஏற்படுத்திக்கொள்ளப்படும் என்றார்கள். இப்போது ஜனவரி என்கிறார்கள். சிலர் மார்ச் மாதம் எனவும் கூறுகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

நாடு எங்குள்ளது, எங்கு செல்கிறது என்பது தொடர்பில் அரசாங்கத்தில் உள்ள எவருக்கும் தெரியாதுள்ளது. 2018ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒவ்வொரு ஜனவரி மாதத்திலும் அந்த ஆண்டுக்கான பயண திட்டங்களை மத்திய வங்கி வெளியிடும். இவ்வாறான நிலையில் மத்திய வங்கியிடம் 2023ஆம் ஆண்டுக்கான பயணத் திட்டமென எதுவுமில்லை. அதாவது ஜி.பி. எஸ்ஸை ஒப் செய்துவீட்டு வழியை தேடுவதுபோல இது இருக்கிறது என்றார். சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை என்றால் என்ன செய்வது? மக்களின் வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்த முடியுமா? என்பதற்கு அரசாங்கம் பதிலளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.



ஜனாதிபதி அலுவலக வளாகத்தில்

## கிறிஸ்மஸ் கரோல் நிகழ்ச்சியை ஜனாதிபதி பார்வையிட்டார்.

ஜனாதிபதி அலுவலக வளாகத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் சுற்றுலா அபிவிருத்திச் சபை, முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து ஏற்பாடு செய்திருந்த விசேட கிறிஸ்மஸ் கரோல் நிகழ்ச்சி உள்ளிட்ட கொண்டாட்டங்களை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் (18) மாலை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

காலி முகத்திடலை அண்மித்த பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்ச்சியைக் காண பெருந்திரளான மக்கள் இன, மத பேதமின்றி ஜனாதிபதி அலுவலக வளாகத்தைச் சுற்றி திரண்டிருந்தனர்.

நிகழ்ச்சியைக் காண்பதற்காக அங்கே குழுமியிருந்த மக்களிடம் ஜனாதிபதி சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டிருந்ததுடன்





அவர்கள், ஜனாதிபதிக்கும் அமோக வரவேற்பளித்தனர்.

அங்கு வருகை தந்திருந்த சிறுவர்களிடம் விவரங்களை கேட்டறிந்த ஜனாதிபதி, அவர்களுடன் புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டார். முப்படை மற்றும் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த பாடகர் குழுவினரின் பங்குபற்றுதலுடன் ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் கிறிஸ்துமஸ் கரோல் நிகழ்ச்சியும் ஆரம்பமானது. டி.எஸ் சேனாநாயக்கவின் சிலைக்கு முன்பாக உள்ள படிக்கட்டுகளில் அமர்ந்திருந்த ஜனாதிபதி, அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோருடன் இணைந்து கிறிஸ்மஸ் கரோல் இசை நிகழ்ச்சியை பார்வையிட்டார்.

## அந்நியச் செலாவணிக்கு IT துறையை மேம்படுத்த நடவடிக்கை



தகவல் தொழில்நுட்பத் துறையை இலங்கையில் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய தொழிலாக மாற்றுவதற்கான விரிவான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவிசாவளை படங்கல இளைஞர் பயிற்சி நிலையத்துக்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வதிவிடப் பயிற்சி முகாமில் கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 180 இளைஞர்கள் கலந்துகொண்டனர். இதன் போது தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் திரு. கனக ஹேரத் அவர்கள் பயிற்சி முகாமின் மாணவர்களுடன் சாதாரண சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 2021ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்பத் துறையின் மூலம் 1500 மில்லியன் டொலர் அந்நியச் செலாவணியை ஈட்ட முடிந்தது. பொது மற்றும் தனியார் துறைகளில் சுமார் 20,000 IT வேலை வாய்ப்புகள் உள்ளது. மேலும், இந்தத் தொழிலுக்குத் தேவையான இளைஞர்களை அணிதிரட்டுவது தொழில்நுட்ப அமைச்சின் பொறுப்பு.

எனவே, தொழில்துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, கலைப் பிரிவில் உயர்தரப் பாடமாக தகவல் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படும். இதற்காக, UNICEF உதவியுடன், 700 ஆசிரியர்களுக்கு தகவல் தொழில்நுட்பப் பயிற்சியளிக்கப்படுகிறது, மூன்றாம் நிலைக் கல்வி முழுவதும் வேலைச் சந்தைக்குத் தேவையான NVQ பாடத்திட்டங்கள் திருத்தப்பட்டு, ஒட்டுமொத்த டிஜிட்டல் கல்விக் கொள்கையின் உருவாக்கம் தொடங்கியுள்ளது, ஏறத்தாழ 50,000 பேர் நேரடியாகத் தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிபுரிகின்றனர். அவர்கள் நாட்டின் வெளிநாட்டு நாணயத்தை ஈட்டுவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில்

## இளம் அதிகாரிகளுக்கு அதிக வாய்ப்பு

**ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க**



அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் இளம் அரச உத்தியோகத்தர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்கத் தயார் என ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார். அத்துடன், அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுப்பதில் அரச அதிகாரிகள் பெரும் செல்வாக்குச் செலுத்த முடியும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதியின் செயலாளர், அதற்காக அரச உத்தியோகத்தர்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

கொள்ளுப்பிட்டி சமுத்திரா ஹோட்டலில் அண்மையில் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவையின் 2012 ஆம் ஆண்டுக் குழுவின் வருடாந்த சிநேகபூர்வ ஒன்றுகூடலில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போதைய ஜனாதிபதி பல சவால்களுக்கு மத்தியில் நாட்டின் பொறுப்பை ஏற்று தற்போது முறையாக பொருளாதாரத்தை கட்டியெழுப்பி, அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதியின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் முன்னேற்றத்திற்காக 2012ஆம் ஆண்டு குழுவினர் ஆற்றிய பணியை ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க பாராட்டியிருந்தார். "Be the impact" என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவையின் 2012 ஆம் ஆண்டு குழுவினரின் வருடாந்த சிநேகபூர்வ ஒன்றுகூடலில் அதன் தலைவர் சுரங்க ரணசிங்க உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் பணியாற்றி வரும் 2012 ஆம் ஆண்டுக் குழுவின் சிரேஷ்ட அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

அரசாங்கம்

## ஐஸை கையிலெடுக்க இதுவே காரணம்



ஐஸ் போதைப்பொருளை தேசிய மட்டத்தில் ஒழிக்க வேண்டுமாக இருந்தால், இந்த போதைப்பொருள் வர்த்தகத்தில் உள்ள அரசியலை ஒழிக்க வேண்டுமென தெரிவிக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி, அடுத்த தேர்தலில் வாக்குக் கேட்கவே ஐஸ் போதைப்பொருளை அரசாங்கம் கையில் எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஐஸ் போதைப்பொருளை நாட்டுக்கு அரசியல் வாதிகளே கொண்டு வருகிறார்கள். அவர்களே அதனை நாடு முழுவதிலும் விநியோகிக்கிறார்கள். பாடசாலை மாணவர்களிடம் ஐஸ் இருக்கிறதா என அவர்களே சோதனை செய்கிறார்கள். இவற்றை எல்லாம் செய்யும் அவர்களே வாக்குகளையும் கேட்பார்கள். ஐஸ் போதைப்பொருளை ஒழிப்பதற்கான இறுதி வாய்ப்பு எனக்கூறி அவர்கள் வாக்கும் கேட்பார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள் எனவும் தெரிவித்தார்.

ஐஸ் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான பாடசாலைகளுக்கு வரும் பொலிஸார் இந்த போதைப்பொருளை எவ்வாறு பயன்படுத்துவதென மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார்கள். இந்த போதைப்பொருள் தொடர்பில் எதுவுமே தெரியாதவர்கள் பொலிஸார் கூறுவதைக் கேட்டு அறிந்துகொள்கிறார்கள். பொலிஸார் சென்றவுடன் ஐஸ் எவ்வாறு பயன்படுத்துவதென தெரியாதவர்களுக்கு இந்த மாணவர்களே சொல்லிக்கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

தேசிய மட்டத்தில் ஐஸ் போதைப்பொருளை ஒழிக்க வேண்டும். ஆனால், இதனைக் கொண்டுவருபவர்களே அதனை ஒழிக்க முடியாது. ஐஸ் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் அரசியல்வாதிகளை வைத்துகொண்டு இதனை ஒழிக்க முடியாது. இதனை நிறுத்த வேண்டுமென்றால் சமூகத்தில் வழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்பதுபோலவே அரசியல் தொடர்பான தீர்மானம் ஒன்றுக்கு மக்களும் வர வேண்டும் என்றார். குறிப்பாக ஐஸ் போதைப்பொருளை கொண்டுவரும் விற்பனை செய்யும் அரசியலையும் ஒழிக்க வேண்டும். இந்த மோசமான அரசியலை ரணில் போன்றவர்களே செய்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

மாணவர்களை

## சோதனையிடுவதை கண்டிக்கிறோம்

பா.நிரோஸ்

போதைப்பொருள் வர்த்தகர்களைக் கைது செய்யாது அப்பாவி பாடசாலை மாணவர்களை சோதனை செய்து அவர்களை சிரமத்துக்குள் தள்ளும் பொலிஸாரின் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.சி.அலவதுவல தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (19) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், ஈஸ்டர் தாக்குதலைப் பயன்படுத்தி தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக்கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய




ராஜபக்ஷ அரசாங்கம், இலங்கையின் சுயாதீனத்தை இல்லாது செய்துள்ளது. நாட்டில் சட்டம் ஒழுங்கு இருக்கிறதா? எனவும் கேள்வி எழுப்பினார்.

மேலும், பிரபல வர்த்தகர் ஒருவர் இரகசியமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார். பிரபல வர்த்தகர்களுக்குக்கூட நாட்டில் பாதுகாப்பு இல்லை. தினந்தோறும் துப்பாக்கிச் சூட்டால் வீதிகளில் பலர் உயிரிழக்கிறார்கள். பாடசாலை மாணவர்களை பொலிஸார் பரிசோதனை செய்யும் நிலைக்கு நாடு வந்துள்ளது. பாடசாலைகளை ஆசிரியர்கள், பெற்றோர்களே சோதனை செய்ய வேண்டும். இதுபோன்ற நிலைமை உலகில் வேறெங்கும் நடக்குமா? எனவும் கேள்வி எழுப்பினார். மாணவர்களை சோதனையிடும் பொறுப்பை பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்கிவிட்டு போதைப்பொருள் வர்த்தகத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொள்ள வேண்டும். நாடு ஆபத்தான நிலைக்கு சென்றுள்ளது.

ஐஸ் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும், அந்த வர்த்தகர்களைப் பாதுகாக்கும் அரசியல்வாதிகள், பாதுகாப்புத் தரப்பினருக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றார்.

4 தூதுவர்கள், 2 வதிவிடப்பிரதிநிதிகளின் நியமனங்களுக்கு

## பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி

நான்கு தூதுவர்கள் மற்றும் இரண்டு வதிவிடப் பிரதிநிதிகளின் நியமனங்களுக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி அண்மையில் வழங்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

அதற்கமைய, பிரான்சுக்கான இலங்கையின் புதிய தூதுவராக மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பின் (UNESCO) இலங்கை வதிவிடப் பிரதிநிதியாக நிரோஷனி மனீஷா டயஸ் அபேவிக்ரம குணசேகரவை நியமிப்பதற்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதேபோன்று, சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கை வதிவிடப் பிரதிநிதியாக ஹிமாலி சுபாஷினி டி சில்வா அருணதிலகவை நியமிப்பதற்கும் உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

மேலும், ஜேர்மனுக்கான புதிய தூதுவராக லங்கா வருணி முத்துகுமாரனவை நியமிப்பதற்கும், ஜோர்தானுக்கான புதிய தூதுவராக ஜே.ஏ.டி.எஸ். பிரியங்கிகாவை நியமிப்பதற்கும், வியட்னாமுக்கான புதிய தூதுவராக சஜீவ உமங்க மெண்டிஸ் அவர்களை நியமிப்பதற்கும் உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

உயர் பதவிகள் பற்றிய குழு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியதுடன், பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன் செனவிரத்ன, அனுர பிரியதர்ஷன யாப்பா, தலதா அத்துகோரல, விஜித ஹேரத், தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் கௌரவ உதய கம்மன்பில ஆகியோர் கலந்துகொண்டனர்.

பொருளாதார நெருக்கடியால் மட்டக்களப்பு

# நெசவு கைத்தறி தொழிலும் பாதிப்பு

■ எம். எஸ். எம் நூர்தீன்



மட்டக்களப்பு, ஆரையம்பதி பிரதேசத்துக்கு உட்பட்ட சிகரம், பாலமுனை போன்ற பிரதேசங்களில் நெசவு கைத்தறி தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பொருளாதார நெருக்கடியால், நெசவு கைத்தறிக்கான நூல்களை பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் 7,000 ரூபாய்க்கு வாங்கிய நூல் இப்போது 22,000 ரூபாயாக விற்கப்படுவதாகவும் இந்த விலைக்கு நூலை வாங்கி, தயாரிக்கப்படும் ஒரு சாறத்தை 2,000 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்ய வேண்டி உள்ளதாகவும் சிகரம் பகுதியைச் சேர்ந்த நெசவு கைத்தறி உரிமையாளர் ஆதம் தெரிவிக்கின்றார்.

ஏற்கெனவே 7,000 ரூபாய்க்கு நூல் விற்பனை செய்த காலத்தில், ஒரு சாறம் 900 ரூபாய்க்கு விற்பனை செய்ய முடிந்ததாகவும் ஏற்கெனவே 15 நெசவு கைத்தறிகள் வேலை செய்த இடத்தில் இப்பொழுது, மூன்று நெசவு கைத்தறிகளே செயற்படுவதாகவும் இப்பிரதேசத்து பெண்களின் வாழ்வாதாரமாக இந்த நெசவு கைத்தறி தொழிலே இருந்ததாகவும் தற்போது அவர்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

## மண்வெட்டி பிடியால் தாக்கப்பட்டு மனைவி கொலை

**கணவன் கைது; மதுபோதையில் சம்பவம்**

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள கருப்பிடமலை, நெவுண்டலியமடு வயல் பிரதேசத்தில், மண்வெட்டி பிடியால் மனைவியை அடித்து கொலை செய்த சம்பவம் நேற்று முன்தினம் (19) இரவு இடம்பெற்றுள்ளது.

கரடியன் குளத்தைச் சேர்ந்த 28 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயாரான ஜெயக்குமார் புவனேஸ்வரி என்பவரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது: வயலில் வேளாண்மை காவலுக்கு அமர்த்தப்பட்ட கரடியன்குளத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையாகிய வல்லிபுரம் ஜெயக்குமார், 10 வயதான மூத்த பிள்ளையை தனது அம்மாவுடன் தங்கவைத்துவிட்டு, தனது மனைவி மற்றும் 5, 3 வயது குழந்தைகளுடன் வயலில் காவலுக்காக அமைக்கப்பட்ட குடிசையில் தங்கி வந்துள்ளார்.

இந்த நிலையில், சம்பவதினம் இரவு கணவனும் மனைவியும் மது அருந்திய நிலையில் இருவருக்குமிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி சண்டையாக மாறியதையடுத்து, அங்கிருந்த மண்வெட்டிப் பிடியால், மனைவி மீது தாக்குதல் மேற்கொண்டதையடுத்து, மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதையடுத்து, மனைவிமீது தாக்குதல் மேற்கொண்ட கணவன் கைது செய்யப்பட்டுள்ளார்.



## கல்முனை ஆதார வைத்தியசாலை சாதனை

■ வி.ரி சகாதேவராஜா

2020ஆம் ஆண்டின் தேசிய உற்பத்தித் திறன் போட்டியில், கல்முனை ஆதார வைத்தியசாலை, இரண்டாம் இடத்தை பெற்றுச்சாதனை படைத்துள்ளது.

தேசிய உற்பத்தித் திறன் போட்டியில் வெற்றியாளர்களை விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை (15) அலரி மாளிகையில் நடைபெற்றபொழுது, கல்முனை ஆதார வைத்திய சாலையின் பணிப்பாளர் டொக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையிலான குழுவினர் பெற்றுக் கொண்டனர்.

அரச திணைக்களங்களுக்கான பிரிவில், கல்முனை ஆதார வைத்தியசாலை இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டதுடன், வேறு எந்த வைத்தியசாலையும் முதலாம், மூன்றாம் இடங்களை பெற்றுக் கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

போதைப்பொருட்களைக் கட்டுப்படுத்தல்

## ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வு



■ நூருல் ஹுதா உமர்

'டயக்கோனியா' சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தின் அனுசரணையில், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல்முன்னணியின் ஏற்பாட்டில் போதைப்பொருள் பயன்பாட்டை கட்டுப்படுத்துவதில் ஊடகங்களின் பங்களிப்பு மற்றும் குடும்பமீதியில் பெண்கள், சிறார்கள் மத்தியில் தாக்கம் குறித்து அம்பாறை மாவட்ட இளம் ஊடக வியலாளர்களுக்கான செயலமர்வு கல்முனையில் நேற்று முன்தினம் (18) நடைபெற்றது.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் யூ.எல் ஹபீலா இணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் வளவாளர்களாக சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எல் அப்துல் அஸீஸ், உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.பி அப்துல் சுக்கூர் ஆகியோர் கலந்து கொண்டதுடன், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ்.எல்.எப் சிபாயா, பி. ஜெனித்தா, பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களான எஸ்.எம்.ஏ நஜீப், எஸ். நிஸாந்தினி உட்பட இளம் ஊடகவியலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

> **போதைப்பொருள் பயன்பாட்டை கட்டுப்படுத்துவதில் ஊடகங்களின் பங்களிப்பு மற்றும் குடும்பமீதியில் பெண்கள், சிறார்கள் மத்தியில் தாக்கம் குறித்து இளம் ஊடக வியலாளர்களுக்கான செயலமர்வு நடைபெற்றது**

வாழைச்சேனையில்

## மின்சாரம் தாக்கி மாடுகள் உயிரிழப்பு

■ எச்.எம்.எம் பர்ஸான்

வாழைச்சேனை, நாவலடி, இன்ஷானியா வீதி தக்வாப் பள்ளிக்கு அருகில், மின்சாரம் தாக்கி மாடுகள் உயிரிழந்துள்ள சம்பவம் நேற்று (19) இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில், மரம் ஒன்று பிரதான மின்கம்பியில் முறிந்து விழுந்ததில் மின் கம்பி அறுந்துள்ளது. இதனால், அந்தப் பகுதியில் மேய்ந்து திரிந்த மாடுகளில் இரண்டு மாடுகள் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளன.

இச்சம்பவத்தில், அப்பகுதியால் சென்ற நபரொருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியதாகவும் சம்பவம் தொடர்பாக மின்சார சபையின் வாழைச்சேனை கிளைக்கு அறிவித்த போது, ஊழியர்கள் தாமதித்தே வருகை தந்ததாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.



'பட்ஜெட்' தோற்கடிக்கப்படும் என்பதை முன்கூட்டியே அறிந்த

# பருத்தித்துறை நகர சபை தவிசாளர் இராஜினாமா

■ எம். றொசாந்த்



பருத்தித்துறை நகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று (19) சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, விவாதங்கள் நடைபெறவிருந்த நிலையில், நகர சபையின் தவிசாளர் யோ. இருதய ராஜா தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட பருத்தித்துறை நகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் டிசெம்பர் ஆறாம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்ட போது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் உள்ளிட்ட எட்டு உறுப்பினர்கள் எதிராக வாக்களித்து தோற்கடித்தனர்.

இந்நிலையில், நேற்று திருத்தங்களுடன் சபையில் சமர்ப்பிக்கப்படவிருந்த வரவு - செலவுத் திட்டத்தையும் உறுப்பினர்கள் தோற்கடிக்க திட்டமிட்டுள்ளதாக வெளியான தகவலை அடுத்து, நகர சபையின் தவிசாளர் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இரண்டாவது தடவையும் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால், தவிசாளர் பதவி வறிதாகும். அந்நிலையில், தோற்கடிக்கப்பட்டு தவிசாளர் பதவியை இழக்காது இருப்பதற்காக, தவிசாளர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார் என சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

## பயிர்களை மேய்ந்த மாடுகளுக்கு விசநீர் வைத்துக் கொலை

■ க. அகரன்

வவுனியா, பூம்புகார் கிராமத்தில் உள்ள விவசாய நிலத்தினுள் பிரதேசவாசிகளின் மாடுகள் சில உட்புகுந்து, அங்குள்ள உழுந்து, நெற் பயிர்களை மேய்வதைக் கண்ணுற்ற விவசாய நில உரிமையாளர் ஆத்திரமடைந்து, அம்மாடுகளுக்கு யூரியா மற்றும் பூச்சிகொல்லி மருந்தை நீரில் கலந்து குடிக்க வைத்துள்ளார். இதைப் பருகிய 10க்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்துள்ளதாக பூம்புகார் கிராம கமக்கார அமைப்பினர் மற்றும் மாட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இந்நீரைப் பருகிய ஏனைய மாடுகளும் தற்போது நோய்வாய்ப்பட்டு உள்ளதாகவும் மாட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். இச்சம்பவம் தொடர்பாக, ஈச்சங்குளம் பொலிஸார் நேற்று முன்தினம் (18) மாலை நேரில் சென்று பார்வையிட்டதுடன், மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.



## கிளிநொச்சியில் மணல் ஏலம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் மணல் ஏலத்தில் விடப்படவுள்ளதாக நீதிமன்ற பதிவாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றினால், நாளைய தினம் (21) முற்பகல் பகல் 9 மணிக்கு குறித்த மணல் ஏலம் விடப்படவுள்ளது. அன்றைய தினம் ஏல விற்பனைக்குரிய மணலை, ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னதாக பார்வையிட முடியும் எனவும் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

## உமையாளர்புரம் பாடசாலை மாணவன் முதலிடம்




■ மு. தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த உமையாளர்புரம் அ.த.க பாடசாலையின் தரம் 3 மாணவன் வசீகரன் சாகிதன், வடக்கு மாகாண அச்சுப்பதித்தல் சித்திரை போட்டியில் முதல் இடத்தை பெற்று, தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். குறித்த பாசாடலையைச் மாணவன் ஒருவன், மாகாண மட்டத்தில் முதல் இடத்தை பெற்றுக்கொண்டுள்ளமை இதுவே முதல் முறையாகும்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில்

## காணி அளிப்பு பத்திரங்கள் கையளிப்பு



■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பாலிநகர், அம்பாள்புரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 71 குடும்பங்களுக்கு நேற்று (19) காணி அளிப்பு பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் நீண்ட காலமாக காணி அனுமதி பத்திரங்கள் வழங்கப்படாத நிலையில், குறித்த பிரதேச மக்களுக்கான காணி அளிப்பு பத்திரங்களைத் துரித கதியில் வழங்கும் செயற்திட்டங்கள் பிரதேச செயலாளர் தலைமையில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், நேற்று பாலிநகர் கிராம அலுவலர் பிரிவு, அம்பாள்புரம் கிராம அலுவலர் பிரிவு ஆகிய பிரிவுகளை சேர்ந்த 71 பேருக்கு காணியளிப்பு பத்திரங்கள் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி ரஞ்சனா நவரட்ணம், உதவி பிரதேச செயலாளர் ஜெபமயூரன், காணி அபிவிருத்தி உத்தியோகத்தர் மதன்ராஜ், குடியேற்ற உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில்

## பாணின் விலை குறைக்கப்படமாட்டாது

■ நிதர்சன் வினோத்

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாணின் விற்பனை விலையில் மாற்றம் ஏற்படாது என, யாழ். மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கத் தலைவர் க. குணரட்ணம் தெரிவித்தார்.

450 கிராம் பாணின் விலை 10 ரூபாயால் குறைக்கப்படும் என, அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்திருக்கிறது. கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் பாண் 250 ரூபாய் விற்கப்படுகிறது. அதனால் அவர்கள் பத்து ரூபாய் குறைத்து விற்பனை செய்யவுள்ளனர். ஆனால் நாங்கள், பாணை 200 ரூபாய்க்கே விற்பனை செய்துவருகின்றோம். அதிலிருந்து பத்து ரூபாய் குறைப்பது முடியாத காரியம் என்றார்.

தேசிய உற்பத்தி திறன் போட்டியில்

## கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு முதலிடம்



■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்ட செயலகம் இரண்டாவது தடவையாகவும் 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தி திறன் போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டதற்கான ஒன்றுகூடல் நேற்று (19) மாவட்ட செயலக முன்றலில் நடைபெற்றது. இதில் மாவட்ட அரச அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்கள், துறை சார் பதவி நிலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

2018/ 2019 ஆம் ஆண்டுகளிலும் தேசிய உற்பத்தி திறன் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் முதலிடத்தை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



வெளிக்கள உத்தியோகத்தரை இடமாற்ற கோரி

# சாமிமலையில் பணி பகிஷ்கரிப்பு

செ.தி.பெருமாள்,நிலமேகம் பிரசாந்த்

சாமிமலை பகுதியில் உள்ள ஹொரனை பிளான்டேசனுக்கு உரித்தான ஸ்டொக்ஹோம் தோட்டத்தில் நேற்று (19) காலை முதல் தொழிலாளர்கள் பணிபகிஷ்கரிப்பை முன்னெடுத்து வருகின்றனர்.

தொழில் பிணக்குகள் சம்பந்தமாக ஹட்டன் தொழில் ஆணையாளர் நாயகம் முன்பாக கடந்த மாதம் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போது, முகாமையாளர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமைக்கு எதிராகவே




இந்த பணிபகிஷ்கரிப்பை முன்னெடுப்பதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதாவது குறித்த தோட்டத்தில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவர், தகாத வார்த்தைகளால் தொழிலாளர்களை பேசுவதாகவும் தகாத முறையில் நடந்து கொள்வதாகவும் எனவே இவ்வாறான வெளிக்கள உத்தியோகத்தரை மாற்றுமாறு கோரியே குறித்த பணிபகிஷ்கரிப்பு இடம்பெற்றது.

இவ்விடயம் தொடர்பாக இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் போராட்டம் இடம்பெற்று வந்த நிலையில் ஹட்டன் தொழில் காரியாலயத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பேச்சுவார்த்தை நடாத்தியது.

இப்பேச்சுவார்த்தையில் ஸ்டொக்ஹோம் தொழிற்சாலை பிரிவின் தலைமை வெளிக்கள உத்தியோகஸ்தர் இடமாற்றம் செய்ய வேண்டுமென இணக்கம் காணப்பட்ட நிலையில் மீண்டும் குறித்த வெளிக்கள உத்தியோகத்தரை தோட்ட முகாமையாளர் பணிக்கு அமர்த்தியமையால் மீண்டும் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக பணி பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளனர்.

## பிள்ளையை தூங்க வைக்க 119க்கு அழைத்த தாய்

தரம் 3இல் கல்விப்பயிலும் பிள்ளையொன்று குடும்பத்தில் ஏனைய உறுப்பினர்களுக்கும் தனக்கும் இடையூறு விளைவித்து இடைஞ்சலாக இருப்பதாக பொலிஸ் அவரச சேவை தொலைபேசி இலக்கமான 119க்கு அழைப்பை எடுத்த தாய், தனது பிள்ளைக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ள சம்பவமொன்று தம்புள்ளை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

அந்த முறைப்பாட்டுக்கு அமைய தம்புள்ளை பொலிஸ் நிலையத்தின் பொலிஸார் இருவர், இரவு வேளையில் சுமார் ஒன்பதுக்கும் 15க்கும் இடைப்பட்ட கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் முறைப்பாட்டாளரின் வீட்டை தேடிச் சென்றுள்ளனர்.

தங்களுடைய மோட்டார் சைக்கிளை நிறுத்திய பொலிஸார், சத்தம்போட்டு கூப்பிட்டபோதும், சில வினாடிகள் அந்த வீட்டிலிருந்து எவருமே வெளியே வரவில்லை.

வீட்டின் கதவை தட்டிய போது அந்த வீட்டின் கதவை திறந்துகொண்டு பெண்ணொருவர் வெளியே வந்துள்ளார்.

“பிள்ளையினால் பெற்றோருக்கு கடுமையான தொந்தரவு என செய்யப்பட்ட முறைப்பாட்டை விசாரணைக்கு உட்படுத்துவதற்காக வந்துள்ளோம்” என பொலிஸார் இருவரும் அந்தப் பெண்ணிடம் தெரிவித்துள்ளனர்.

“ஐயோ, நன்றாகவே சுணங்கிவிட்டது. அந்தப் பிள்ளை இப்போது தூங்குகிறாள். நான், பொலிஸூக்கு 4 மணிக்கு கதைத்தேன். இப்போது நேரம் ஒன்பது மணியாகிவிட்டது” என அந்தப் பெண் பதிலளித்துள்ளார்.

எனினும், இந்த புதுமையான பிரச்சினை தொடர்பில் பொலிஸார் அந்தப் பெண்ணிடம் விசாரித்துள்ளனர்.

“என்னுடைய பிள்ளை தரம் 3இல் கல்விப்பயிலுகின்றாள். இரவு வேளையில் சீக்கிரமாக தூக்குமாறு அறிவுறுத்தியும் அந்த பிள்ளை தூங்குவதே இல்லை. தூக்கத்துக்குச் செல்லாமல் பல்வேறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றாள். ஏனைய பிள்ளைகளையும் தூங்க விடுவதே இல்லை. கேளி, கிண்டல் செய்வதுடன் ஏனைய பிள்ளைகளையும், தந்தையையும் தூங்கவே விடுவதே இல்லை என்றாள்.

இந்த வீட்டுக்கு பொலிஸார் செல்லும் போது இரவு 9 மணியை நெருங்கியிருந்தது என்பதால், இந்த பிள்ளை எத்தனை மணிக்கு தூங்கவேண்டுமென நீங்கள் அறிவுறுத்தியுள்ளீர்கள் என அந்தப் பெண்ணிடம் பொலிஸார் கேட்டுள்ளனர்.

மாலை 6 மணிக்கு அந்தப் பிள்ளை தூக்கத்துக்குச் செல்லவேண்டும். முன்னதாக சாப்பாட்டை ஊட்டிவிட்டு அந்தப் பிள்ளையை நித்திரைச் செய்வேன். தரம் 3இல் பயிலும் அந்தப் பிள்ளை தூங்கமாட்டாள். தூங்க வைப்பதற்காக, பொலிஸாரை அழைப்பதற்கே அழைப்பை ஏற்படுத்தினேன் என்றும் அந்தப் பெண் பதிலளித்துள்ளார்.

அந்த தாய்க்கு கடுமையான அறிவுரைகளை வழங்கிய பொலிஸார், இவையெல்லாம் சிறிய பிரச்சினைகளாகும். பொலிஸாரின் நேரத்தையும் பொதுமக்களின் பணத்தையும் நாசம் செய்யாது. இனிமேலும் இவ்வாறு தேவையில்லாத முறைப்பாடுகளை செய்யாமல் இருக்குமாறு அப்பெண்ணுக்கு அறிவுரை கூறிவிட்டு பொலிஸார் இருவரும் அங்கிருந்து இரவோடு இரவாக பொலிஸ் நிலையத்துக்கு கிளம்பிவிட்டனர்.

தெஹியோவிட்ட பிரதேச செயலகப் பிரிவில்

## 10 பேர் சட்டரீதியான தம்பதிகளாயினர்

என்.ஆராச்சி

தெஹியோவிட்ட பிரதேச செயலகத்தின் பதிவாளர் பிரிவு மற்றும் பிரதேச செயலகத்தின் அதிகாரிகள் இணைந்து தெஹியோவிட்ட பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பெருந்தோட்ட மக்களுக்கான பல வேலைத்திட்டங்களை அண்மையில் முன்னெடுத்தனர்.

இதற்கமைய குறித்த பகுதிகளில் சட்டரீதியாக திருமணம் முடிக்காமல் தம்பதிகளாக வாழ்ந்த 10 பேருக்கு சட்டரீதியாக



திருமணம் முடித்து வைக்கப்பட்டது.

அத்துடன் பிறப்புச் சான்றிதழ் அற்ற 35 சிறுவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன்,அந்த சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் பம்பேகம, கந்தவத்த ஆகிய தோட்டங்களில் தொழில்வாய்ப்பற்ற யுவதிகளுக்காக கேகாலை மக்கள் அபிவிருத்தி மன்றத்தால் இலவசமாக நடத்தப்பட்ட பாடநெறியை நிறைவுசெய்த 31 பேருக்கு சான்றிதழ்களும் இதன்போது வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக கேகாலை மாவட்ட மேலதிக செயலாளர் சரிதா இலங்கோன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பூட்டிய பாடசாலைக்குள்

## கஞ்சா புகைத்தவர்களுக்கு பிணை

நவி

கம்பளை நகரில் இருக்கும் பிரபல பாடசாலைக்குள் கஞ்சாவை புகைத்த நால்வர் கம்பளை குற்றத்தடுப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெள்ளிக்கிழமை(16) இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் குறித்த பாடசாலையின் இரவு காவலாளியின் உதவியுடன் சந்தேகநபர்கள் நால்வரும் பாடசாலைக்குள் இச்செயலில் ஈடுபட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

குறித்த பாடசாலை வளாகத்தில் இரவு நேரங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதாக கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலுக்கு அமைய, கம்பளை பொலிஸாரால் பாடசாலை சுற்றிவளைக்கப்பட்டு, சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை, கம்பளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது, தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீர பிணையில் சந்தேகநபர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு


## இராணுவம் பால்மா வழங்கியது

ரஞ்சித் ராஜபக்‌ஷ

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இராணுவத்தினரால் பால்மா பெக்கட்டுகள் வழங்கி வைக்கப்பட்டன.

அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் 1,398 குடும்பங்களுக்கு பசுமை விவசாய மத்திய நிலையம் மற்றும் இராணுவத்தினர் இணைந்து பால்மா பெக்கட்டுகளை வழங்கி வைத்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு



நிவாரணம் வழங்கவும் உணவு பாதுகாப்பை ஏற்படுத்தி, போசனை மட்டத்தை அதிகரிப்பதற்காகவும் அமைக்கப்பட்டுள்ள பசுமை விவசாய மத்திய நிலையம் மற்றும் இராணுவத்தினர் இணைந்து இந்நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இந்த நிகழ்வுக்கு அண்மித்ததாக ஹட்டன் வலயத்தில் உள்ள குறைந்த வருமானம் பெறும் 120 குடும்பங்களுக்கும் பால்மா பெக்கட்டுகள் வழங்கப்பட்டன.





## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 200 ஆவது ஜனன தினம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 200 ஆவது ஜனன தினமும் இந்து சமுதாய பாதுகாப்பு தினமும் இலங்கை இந்து சுயம் சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் தலவாக்கலை நகரில் நடைப்பெற்றது. இந்நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை (18) தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றன.
(பி.கேதீஸ்)

## சப்ரகமுவ மாகாண விளையாட்டுப் போட்டிகள்

சிவாணி ஸ்ரீ

47 ஆவது தேசிய விளையாட்டு நிகழ்வை முன்னிட்டு, சப்ரகமுவ மாகாண விளையாட்டுப்போட்டி நிகழ்வு, 17ஆம் திகதி, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் எம்பிலிபிட்டிய மகாவலி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

சப்ரகமுவ மாகாண விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் மாகாண விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேற்படி நிகழ்வில் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன.


இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, எம்பிலிபிட்டிய நகர சபையின் தவிசாளர் தினேஷ் மதுசங்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



அனைத்து அரசாங்கங்களும் தொழிலாளர்களை

## மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்க்கின்றது

ரஞ்சித் ராஜபக்‌ஷ



ஆட்சிக்கு வரும் எந்தவோர் அரசாங்கமும் தொழிலாளர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்றவில்லை என தெரிவித்த கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார், அனைத்து அரசாங்கங்களும் தொழிலாளர்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே நோக்குகிறது என்றார்.

ஹட்டன் கல்வி வலயத்தின் கீழுள்ள பாடசாலைகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பிலும் அதனைத் தீர்ப்பது தொடர்பிலும் பாடசாலை அதிபர்களுடன் ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், தோட்டத் தொழிலாளர்கள் பொருளாதார ரீதியான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ள நிலையில் அவர்களின் பிள்ளைகள் போசாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலையிலிருந்து பிள்ளைகளை மீட்டெடுத்து,தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தி வாழ்வாதார செலவைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

அத்துடன் நாட்டின் தற்போதைய நிலையில், தோட்டப் பாடசாலைகளுக்கு வருகைத் தரும் மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது என்றார்.

நாட்டின் பொருளாதாரம் பாரிய பின்னடைவில் இருக்கும் போது, பாரிய நிதியை செலவழித்து தேர்தலை நடத்துவது பொருத்தமற்ற செயற்பாடு என்றார். தனக்கு தெரிந்த வரையில் விரைவில் தேர்தல் ஒன்று நடைபெறாது என்றும் அதற்காக அரசாங்கத்தில் இருக்கும் எவரும் தயார் இல்லை என்றார்.






## வருடாந்த பரிசளிப்பு விழா

நானுஓயா –டெஸ்போட் ஏ பிரிவு “ரெயின்போ" முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்ச்சிகளும் நு/எபட்ஸ்போட் தமிழ் வித்தியாலய ஒன்று கூடல் மண்டபத்தில் ஆசிரியர் வனிதாமலர் கிருஷ்ணகுமார் தலைமையில் சனிக்கிழமை (17) நடைபெற்றது. (டி சந்ரு)

# மடையர்களாக்கும் அரசியல்வாதிகளும் அழிவின் விளிம்பில் தமிழினமும்

இனப்பிரச்சினைக்கு 75ஆவது சுதந்திர தினத்துக்கு (2023 பெப்ரவரி 04) முன்னதாக தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் விடுக்கப்பட்ட அழைப்புக்குப் பின்னர், 'அழைப்பு' தொடர்பிலும் 'பங்கேற்பு' குறித்தும் பொதுவெளியில் கருத்தாடல்கள் முன்வைக்கப்படுகின்றன.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் உட்பட, பலரும் அந்த அழைப்பை ஆரம்பத்தில் இருந்தே 'காதில் பூச் சுத்தும்' அழைப்பென விமர்சனத்துக்கு உட்படுத்தி வருகின்றனர். அரசாங்க தரப்பிலிருந்து ஆதரவுக் கரம் இன்னுமே நீட்டப்பட்டுகின்றது.

பேச்சுக்கு அழைப்பு விடுக்கப்படும் அதேநேரத்தில் வடக்கு, கிழக்கில் தமிழர்களின் பூர்வீக, வணக்கஸ்தலங்களுக்கான தனியார் மற்றும் அரச காணிகளையும் அடாத்தாக பிடிக்கும் செயற்பாடுகள் நிறுத்தப்படவே இல்லை. தொல்பொருள் ஆராய்ச்சி எனும் போர்வைக்குள் இருந்துகொண்டு, காணி சுவீகரிப்புகள் அப்பட்டமாக முன்னெடுக்கப்படுகின்றன.

ஜனாதிபதியுடன் பேசும் தரப்புகள் எவ்வாறான நிகழ்ச்சி நிரலை வைத்துள்ளன என்பது மர்மமாகவே உள்ளது. எனினும், நிபந்தனைகளை விதித்துவிட்டு பேச்சுக்கு சென்றிருக்கலாம் என்பதே, பேச்சை புறக்கணித்திருக்கும் தமிழ்த்தரப்பினரின் வாதமாக இருக்கிறது.

பேச்சை புறக்கணித்திருக்கும் பெரும்பான்மையின சிங்கள கட்சிகள், "52 நாள்களில் சாத்தியப்படாது; பிரிவினைக்கு வித்திடும் செயல்" என்றெல்லாம் இனவாதத்தை கக்கிக்கொண்டிருக்கின்றன.

தமிழினம் அழிவின் விளிம்பில் இருந்து தப்பவேண்டுமெனில், தமிழர் தாயகம் மீதான நில ஆக்கிரமிப்புகள் நிறுத்தப்படவேண்டுமென யாழ்ப்பாண பல்கலைக்கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

பூர்வீக காணிகளை இழந்துவிட்டு, தீர்வை வைத்து என்ன பயன்? வடக்கு - கிழக்கை பொறுத்தவரையில், சிங்கள குடியேற்றங்கள் பல கோணங்களிலும் பல வழிகளிலும் முன்னெடுக்கப்படுகின்றன. அங்கிருக்கும் சனத்தொகையை படைத்தரப்பு விஞ்சி நிற்கின்றது என்ற குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

தமிழர்கள் மீதான அடக்குமுறைகளும் ஆக்கிரமிப்புகளும் தொடர்கின்றன. தமிழரின் தொல்லியல் அடையாளங்கள் அழிக்கப்படுகின்றன. ஆகவே, பேச்சுக்கு செல்லும் தரப்பினர், தமிழர்களின் குமுறல்களுக்கு செவிசாய்த்து, வட்டமேசைக்கு கொண்டுசெல்வது காலத்தின் கட்டாயமாகும்.

"வடக்கு-கிழக்கின் தமிழர் பகுதியில் இந்து கோவில்கள் இடிப்பு, காணிகள் அபகரிப்புகளை நிறுத்தினால் தான் அரசாங்கத்துடன் பேச்சுக்கு வருவோம் என்று சொல்லத் தைரியம் இல்லாத தமிழ் தலைமைகள், 70 வருடகாலமாகத் தீர்க்க முடியாத அரசியல் பிரச்சினையை ஒன்றரை மாதத்தில் ஜனாதிபதி தீர்ப்பார் என நம்பிப் சென்று, தமிழ் மக்களை மடையர்கள் ஆக்குகின்றனரா" என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளமை குறித்தும் கவனம் செலுத்தவேண்டும்.

'வீசிய கையும் வெறுங்கையுடன்' பேச்சுக்கு சென்று, சொல்வதற்கெல்லாம் தலையாட்டும் பொம்மைகளாக இருந்து, கதிரைகளைச் சூடாக்குபவர்களாக இருக்காமல், நிபந்தனையுடன் பேச்சுக்கு செல்வதே கடந்த கால அனுபவஞானம் கற்றுத்தந்த பாடம் என்பதை மறந்துவிடக்கூடாது.

அதற்கு முன்னர், தமிழ் அரசியல்வாதிகள், சிவில் சமூகத்தினர் உள்ளிட்ட கல்விமான்களுடன் கலந்துரையாடி, நிபந்தனையுடனான நிகழ்ச்சி நிரலை தயாரித்துக்கொண்டு, பேச்சுவார்த்தைக்குச் சென்று அமர்ந்திருக்கலாம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# தனியார் சட்டம் படும்பாடு

**மொஹமட் பாதுஷா**

ஒரு சமூகம் தன்னுடன் தொடர்புபட்ட விடயங்களை, ஒருமித்த நிலைப்பாட்டுடனும் காத்திரமாகவும் கையாளத் தவறுகின்ற போது, அவ்விடயங்களில் வெளித்தரப்பினரின் செல்வாக்கு மேலோங்குகின்றது. அதாவது, அவ்விவகாரம் எடுப்பார் கைப்பிள்ளையாக ஆகிவிடுகின்றது.

முஸ்லிம் சமூகம், தனது சமூக, அரசியல், மத விடயங்களில் இவ்வாறான சிக்கல் நிலையை தொடர்ச்சியாக எதிர்கொண்டு வருகின்றது. அப்படியான ஒன்றுதான் முஸ்லிம் தனியார் சட்டம் அல்லது விவாக, விவகாரத்துச் சட்ட மறுசீரமைப்பு விவகாரமாகும்.

தனியார் சட்டத்தில் திருத்தத்தை கொண்டு வரவேண்டும் என்பதில் முஸ்லிம் மக்கள் எல்லோருக்கும் உடன்பாடு காணப்படுகின்றது. இருப்பினும், என்ன விடயதானங்களில், எவ்வாறான திருத்தத்தை மேற்கொள்வது என்பதில்தான் கருத்து வேற்றுமைகள் நிலவி வருகின்றன.

முஸ்லிம்களைக் குறிவைத்த சர்வதேச நிகழ்ச்சி நிரல்கள், அமைப்புகள் மற்றும் கடும்போக்கு சக்திகளின் நகர்வுகள் என்பன இந்தத் தனியார் சட்டத் திருத்ததில் தாக்கம் செலுத்தி வருகின்றன. மிக இலகுவாகச் செய்து முடிக்க வேண்டிய காரியத்தை, பூதாகரமாக்கி படாதபாடுபடுத்தி உள்ளனர்.

இந்நிலையில், சட்டத்தரணி ஹலீம்தீன் தலைமையிலான குழுவால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு, தனியார் சட்டத் திருத்தத்தை மேற்கொள்வதற்கான அங்கிகாரத்தை அமைச்சரவை வழங்கியிருக்கின்றது. எனவே, மிகக் கிட்டிய காலத்தில், முஸ்லிம் தனியார் சட்டம் திருத்தப்படலாம் என்ற அறிகுறி இப்போது தென்படத் தொடங்கியுள்ளது.

இலங்கையில் பொதுவான சட்டத்துக்குப் புறம்பாக, மூன்று பிரத்தியேக சட்டங்கள் உள்ளன. கண்டியச் சட்டம், தேசவழமைச் சட்டம், முஸ்லிம் தனியார் சட்டம் என்பவையாகும். இவற்றில் பரந்த அளவில் இன்றுவரை பயன்பாட்டில் உள்ள சட்டமாக, முஸ்லிம்களுக்கான பிரத்தியேக சட்டத்தை கூறலாம்.

பல்லின நாடொன்றில் வாழ்கின்ற ஓரின அல்லது மதக் குழுமத்துக்கு மட்டும், அதுவும் குறிப்பாக விவாக விவகாரங்களில் ஒரு தனிச் சட்ட நடைமுறை இருப்பது என்பது, முஸ்லிம்களுக்கு சர்வசாதாரணமாகத் தோன்றினாலும் ஏனைய சமூகங்களுக்கு குறிப்பாக கடும்போக்குச் சிங்களவர்களுக்கு, அது வேறுமாதிரியாகத்தான் தோன்றும். இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

ஆகவே, இதை முற்றாக நீக்கி, பொதுவான சட்டத்தின் கீழ் முஸ்லிம்களை கொண்டுவர வேண்டும் என்று கடும்போக்காளர்கள் கூறி வருகின்றனர். ஆயினும், இச்சட்டம் களவாக இயற்றப்பட்டது இல்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது. இது அனைத்து சட்டபூர்வ தன்மைகளைக் கொண்டதாகும். எனவே, காலத்துக்கு ஏற்ற மாற்றங்களை மட்டும் கொண்டு வரவேண்டும் என்பதே முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாடாகும்.

இந்தப் பின்னணியிலேயே, 2009ஆம் ஆண்டில் ஓய்வுநிலை நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையில், முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட இதற்கென ஒரு குழுவை நியமித்தார். மிகச் சிறந்த ஆளுமையுள்ள சலீம் மர்சூப் தலைமையில் திருத்தங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக ஆராயப்பட்டன.

இக்குழுவில், சில திருத்தங்கள் தொடர்பில், சிலர் மாற்றுநிலைப்பாடுகளை எடுத்தனர். அத்துடன் சில வெளிச்சக்திகளும் இதற்குள் மூக்கை நுழைத்துக் கொண்டன. குறிப்பாக, உரிமைசார் அமைப்புகள் தமக்கு வேண்டியதை இதன்மூலம் செய்ய முற்பட்டன.

இந்தப் பின்னணியில், இக்குழுவால் கடைசி மட்டும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரமுடியவில்லை. கிட்டத்தட்ட ஒன்பது வருடங்களின் பின்னர், சலீம் மர்சூப் தலைமையிலான இக்குழு இரண்டாகப் பிரிந்து, இருவேறு அறிக்கைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பித்தது.

அதாவது, தனியார் சட்டத் திருத்தத்தில் முஸ்லிம் சமூகத்துக்குள் ஒருமித்த நிலைப்பாடு இல்லை என்பதை, எழுத்தில் முன்வைத்த ஓர் ஆவணமாகவும் இதைக் கருதலாம். இதனால், இவ்விவகாரம் ஒரு முடிவுக்கு வரவில்லை.

ஆனால், காலத்துக்கு அவசியமான மற்றும் பல்லின நாட்டுக்கு பொருத்தமான திருத்தங்களை, இச்சட்டத்தில் மேற்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே, முஸ்லிம் சமூகம் தொடர்ந்தும் உள்ளது. வெளித்தரப்புகள் இச்சட்டத்தை வேறு கண்கொண்டே பார்க்கின்றன என்பது தனிக்கதை.

இந்நிலையில், சில காலத்துக்கு முன்னர் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பில் மறுபரிசீலனை செய்து ஆலோசனைகளை முன்வைப்பதற்காக, சட்டத்தரணி ஹலீம்தீன் தலைமையில் ஒன்பது பேர் கொண்ட குழுவை நியமித்தார். இந்தக் குழு தனது இறுதி அறிக்கையை, சில நாள்களுக்கு முன்னர் சமர்ப்பித்துள்ளது.

முன்னதாக, பலதார திருமணத்தைத் தடை செய்தல்; பெண்ணின் திருமண வயதெல்லையை 18ஆக உயர்த்துதல் உள்ளிட்ட முன்மொழிவுகளுக்கு 2021 மார்ச்சில் அமைச்சரவை அனுமதி அளித்திருந்தமை நினைவு கொள்ளத்தக்கது.

இந்தப் பின்னணியில், இப்போது ஹலீம்தீன் குழு சமர்ப்பித்துள்ள மிகப் பிந்திய அறிக்கையில், நிபந்தனைகளுடன் பலதார திருமணத்தை அனுமதித்தல்; பெண்களின் திருமண வயதெல்லையை 18ஆக உயர்த்துதல்; பிள்ளை, மனைவி தாபரிப்பு கொடுப்பனவுகள் உள்ளிட்ட பல விடயதானங்களில் பொருத்தமான பல திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கைக்கு கடந்த சில தினங்களுக்கு முன்னர் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஏற்கெனவே, பல்வேறு காரணங்களால் காதி நீதிமன்ற முறைமையை முற்றாக நீக்குவதென்ற நிலைப்பாட்டுக்கு கிட்டத்தட்ட அரசாங்கம் வந்திருந்தது. அதற்குப் பதிலாக 'பெமிலி கொன்சிலேட்டர்' என்ற பெயரில் 'குடும்ப ஆலோசனை சபை'யை உருவாக்கும் யோசனையும் அரசாங்கத்திடம் இருந்தது.

ஆயினும், புதிய சிபாரிசு அறிக்கையின் பிரகாரம், இதனை முற்றாக நீக்காமல், மறுசீரமைத்து பலப்படுத்துவதென இப்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. மிகமுக்கியமாக, இத்திருத்தம் தொடர்பான விடயங்களில், முஸ்லிம் எம்.பிக்கள் இப்போது பெரும்பாலும் ஒருமித்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளதாக அறிய முடிகின்றது.

ஆகவே, முஸ்லிம் தனியார் சட்டத்தை திருத்த வேண்டும் என்ற முடிவுக்கு சமூகம் எப்போதோ வந்துவிட்டது என்றாலும், இதனை இன்றுவரை செய்ய முடியாமல் போனதற்கு கடும்போக்கு சக்திகளின் அழுத்தம், ஆட்சியாளர்களின் மனோநிலை, மனித உரிமை என்று சொல்லிக் கொண்டு திரியும் வெளிஅமைப்புகள், மதஉரிமை என்று விடாப்பிடியாக இருக்கும் தரப்பு ஆகியோரின் நடவடிக்கைகள் எல்லாம் காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், முஸ்லிம் தரப்பில் ஏற்பட்ட ஒருமித்த நிலைப்பாடற்ற நிலை, இதனை எல்லாம் விட முக்கிய காரணியாகியுள்ளது.

தனியார் சட்ட விடயத்தில் மட்டுமன்றி, அரசியல், சமூக விவகாரங்களிலும் முஸ்லிம் தரப்புகள் ஆளுக்கொரு நிலைப்பாட்டை எடுப்பதே, பல்வேறு பின்னடைவுகளுக்கு வழிவகுத்துள்ளன என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

இலங்கை முஸ்லிம்கள் சில யதார்த்தங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, இது ஓர் அரபு நாடல்ல என்பதையும் அங்குள்ள வரப்பிரசாதங்கள், இங்கு எமக்கு தங்கத்தட்டில் வைத்து வழங்கப்படாது என்பதையும் விளங்கிக் கொள்ளவேண்டும்.

அதற்காக, இன, மத உரிமைகள் எல்லாவற்றையும் பறிகொடுத்துவிட்டு, அடையாளம் இழந்த ஒரு சமூகமாகவும் வாழக்கூடாது; தேவைப்படும் போது போராட வேண்டும். ஒரு பல்லின நாடு என்ற அடிப்படையில், எல்லா விடயங்களையும் யதார்த்த பூர்வமாக நோக்க வேண்டும். அளவுக்கதிகமான 'மதம் பிடித்தல்' ஆபத்தானது என்பதைப் புரிந்து கொள்வது அடிப்படையானது.

தனியார் சட்டத்தையும், சரிஆ விதிமுறைகளையும் நடைமுறையில் தக்க வைத்திருப்பது, கட்டாயமான விடயம். ஆனால், இஸ்லாமிய சட்ட திட்டங்களுக்கு அமைய ஒரு முன்மாதிரி சமூகமாக முஸ்லிம்கள் அனைவரும் வாழ்ந்து காட்ட வேண்டும். தவறான காரியங்களுக்காக இஸ்லாமும் அதன் வேதமும் தூக்கிப் பிடிக்கப்படுவதை தண்டனைக்குரிய குற்றமாக முஸ்லிம் சமூகம் நோக்க வேண்டும். இஸ்லாமிய சட்ட நடைமுறைகளின்பால் நின்று, சமூகத்தையும் அரசியலையும் திருத்த வேண்டும். அது பிற சமூக மக்களுக்கு முன்மாதிரியாக அமைவது நல்லது.

மிக முக்கியமாக, 'ஒற்றுமை எனும் கயிற்றை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்' என்று இஸ்லாம் வலியுறுத்துகின்றது. அந்த அடிப்படையில், சிவில் சமூகமும் அரசியல்வாதிகளும் ஒற்றுமையாகவும் ஒருமித்த நிலைப்பாட்டுடனும் செயற்பட வேண்டியுள்ளது.

மத அடையாளத்தை முன்னிறுத்தி அரசியல் செய்து விட்டு, பின்னர் இஸ்லாம் கூறுகின்ற போதனைகளை எல்லாம் கணக்கிலெடுக்காமல், மக்களை மறந்து செயற்படுகின்ற போக்கு தவிர்க்கப்பட வேண்டும். மக்களை ஏமாற்றுகின்ற அரசியல், சமூகவாதிகளுக்கு பாடம் புகட்டுவதற்கு முஸ்லிம் சமூகம் ஒருபோதும் பின்னிற்கக்கூடாது.

எனவே, முஸ்லிம் தனியார் சட்டத்தை வெளித்தரப்பினர் விரும்பியவாறு திருத்த முடியாது. அவர்களது நிகழ்ச்சி நிரலும் நோக்கமும் இதனூடாக நிறைவேற இடமளிக்க முடியாது.

மாறாக, பல்லின சமூகத்தினிடையே ஒரு தனித்துவ அடையாளமுள்ள தேசிய இனமான முஸ்லிம்கள் தமது மார்க்க சட்டங்களை மிதமாக கடைப்பிடிக்க வழிவகுக்கும் வகையிலேயே திருத்தங்கள் அமைய வேண்டும். இல்லாவிட்டால் பிரத்தியேக சட்டமொன்று அவசியமே இல்லையே.

ஆனால், இன்று முஸ்லிம்கள் முன்னுள்ள பணி, தனியார் சட்டத்தை திருத்துவது மட்டுமல்ல! அதையும் தாண்டி, அரசியல், சமூக, தேசிய விவகாரங்களில் ஒற்றுமைப்பட்ட ஒரு முன்மாதிரி சமூகமாக வாழ வேண்டியதும் அவசியமாகும்.



## வாழ்வியல் தரிசனம்

ஆடம்பரமாக வாழ்ந்தால்த்தான் தங்களுக்குக் கௌரவம் கிடைக்கும் என நம்புகின்றார்கள். ஒருவரின் பெறுமதியை வெளிப்பார்வையில் மதிப்பிடுவது பெரும்பாலும் தவறாகவே அமைந்துவிடுகின்றது.

ஆடம்பரமாகத் தோற்றம் காட்டுபவர்கள் யாவரும் கல்வியறிவு, பணபலம் கொண்டவர்கள் என்றே பலரும் கருதுகின்றார்கள். பார்வையால் எவரையும் 'இப்படிப்பட்டவர்தான்' எனக் கண்டுபிடிக்க முடியாது.

முகநூலில் நண்பர்களாகி, அவர்களையே நம்புபவர்களால், நேரில் பார்ப்பவர்களைப் பற்றி எப்படித் தெரிந்துகொள்ள முடியும்?

இந்த உலகம் பொய்மையில் அழகைக் காண்கின்றது. ஒழுக்கம் என்றால் என்ன எனத் தேடுவதும் கிடையாது. எவரையும் உடன் சந்தேகப்படவும் கூடாது. அதேவேளை, எவரையும் உடன் நம்புவதும் சரியானதில்லை.

இன்றைய உலகில் கற்றவர்கள், செல்வந்தர்கள் கூட, பண்பு தெரியாமல் வாழ்கின்றார்கள். எளிய நிலையில் தோற்றம் காட்டுபவர்களை மட்டுமல்ல, யாவரையும் கௌரவப்படுத்த வேண்டும்.

எவர் எப்படித் தோன்றினாலும், பண்பான மனிதர்களாக இருந்தால், அவர்களுடன் பேசும்போதும் பழகும்போதும் உண்மைநிலை புரியும். எவரையும் மதித்து நடப்பவரே ஒழுக்கமான மனிதர்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### காட்டு யானையின் அட்டகாசத்தால் பெரும் சேதம்

திருகோணமலை மாவட்டம், குச்சவெளி பிரதேச செயலகப் பகுதிக்கு உட்பட்ட நிலாவெளி, பெரியகுளம் பகுதியில் காட்டு யானையின் அட்டகாசத்தால் உயிர் அச்சுறுத்தல்களையும் சொத்து இழப்புகளையும் பல்வேறான துன்பங்களையும் தினமும் அனுபவித்து வருவதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குடிமனைக்குள் அடிக்கடி பிரவேசிக்கும் யானை, பாடசாலை வளாகத்தின் சுற்று மதில்களைப் பல தடவைகள் சேதமாக்கி உள்ளதாகவும் பெரியகுளம் கிராமமக்கள் தெரிவிக்கின்றனர்.

காட்டு யானையின் தொடர் அட்டகாசத்தால், நிம்மதியாகத் தூங்க முடியாத நிலையும் தங்களது பிள்ளைகளை அச்சத்துடனேயே பாடசாலைக்கு அனுப்புவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும், கிராமத்துக்குள் புகும் காட்டு யானை, தமது வாழ்வாதாரமாக இருக்கும் மேட்டு நிலப் பயிர்களையும் துவம்சம் செய்து விட்டு செல்வதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, காட்டு யானையின் தொடர் தொல்லைகள், தாக்குதல்களில் இருந்து பெரிய குளம் கிராமத்தைப் பாதுகாக்க, உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யானையின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ள மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஹஸ்பர்



# தனியாக சந்திக்க வேண்டாம்






தமிழ் திரையுலகின் பிரபல பாடகியான சின்மயி, சில வருடங்களுக்கு முன்பு கவிஞர் வைரமுத்து மீது ‘மீ டு'பாலியல் புகார் அளித்து பரபரப்பை ஏற்படுத்தினார். மேலும் கவிஞர் வைரமுத்துவால் ஏராளமான பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், பாலியல் தொல்லைகளால் பாதிக்கப்படும் பெண்களுக்கு ஆதரவாக தொடர்ந்து குரல் கொடுத்து வரும் சின்மயி, கவிஞர் வைரமுத்துவை சந்தித்த தொலைக்காட்சி நடிகையை எச்சரித்து பதிவிட்டுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நடிகையும், தொகுப்பாளினியுமான அர்ச்சனா சில தினங்களுக்கு முன்பு வைரமுத்துவை சந்தித்த பொழுது எடுத்துக் கொண்ட புகைப்படத்தை பகிர்ந்திருந்தார். அப்பொழுது வைரமுத்து ஆசிர்வாதம் அளிப்பது போன்ற புகைப்படத்தையும் இணைத்திருந்தார்.

இந்நிலையில் நடிகை அர்ச்சனாவின் பதிவுக்கு கருத்து பதிவு செய்துள்ள சின்மயி, துணைக்கு யாரும் இல்லாமல் வைரமுத்துவை சந்திக்க வேண்டாம் என எச்சரித்து பதிவிட்டுள்ளார்.



## ‘காசேதான் கடவுளடா’

அஜித் நடித்த ‘துணிவு’ திரைப்படம் வரும் பொங்கல் தினத்தில் வெளியாக இருக்கும் நிலையில் ஏற்கனவே ’சில்லா சில்லா’ என்ற பாடல் வெளியாகி இணையதளங்களை ஸ்தம்பிக்க வைத்த நிலையில் ’காசேதான் கடவுளடா’ என்ற பாடல் வெளியாகியுள்ளது.

இந்த பாடல் இணையதளங்களில் தற்போது வைரலாகி வருகிறது. வைசாக் எழுதியுள்ள இந்த பாடலுக்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார். இந்த பாடலை வைசாக், மஞ்சுவாரியர் மற்றும் ஜிப்ரான் ஆகியோர் பாடியுள்ளனர்.

இந்த பாடலில் ஒவ்வொரு வரியையும் ரசிகர்கள் ரசித்து வருகிறார்கள். மேலும் இந்த பாடல் முதல் முறை கேட்கும்போதே ஆட்டம் போட வைக்கும் அளவுக்கு இருப்பதாக ரசிகர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.



## காஸ்பந்து போட்டியை நேரில் ரசித்த நடிகர்

உலக கோப்பை கால்பந்து போட்டி நேற்று இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில் இந்த போட்டியை நேரில் கண்டு ரசிக்க உலகம் முழுவதிலும் இருந்து ஏராளமான திரையுலக பிரபலங்களும் கலந்து கொண்டனர்.

உலககோப்பை அறிமுகம் செய்த தீபிகா படுகோன், ஷாருக்கான் உள்ளிட்ட பலர் இந்த போட்டியை நேரில் ரசித்த நிலையில் தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகர்களில் ஒருவரான மம்முட்டி உலகக்கோப்பை கால்பந்து போட்டியை கத்தார் நாட்டில் உள்ள மைதானத்தில் கண்டு ரசித்தார்.

இந்த போட்டியை அவர் ரசித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் போது எடுத்த செல்ஃபி புகைப்படத்தையும் அவர் தனது சமூக வலைத்தளத்தில் பதிவு செய்துள்ளதை அடுத்து அந்த புகைப்படம் தற்போது வைரலாகி வருகிறது.

# சிவகார்த்திகேயன் அடுத்த படத்தில் ‘அவதார்’ கலைஞர்




சிவகார்த்திகேயனின் அடுத்த படத்தில் ‘அவதார்’ படத்தில் பணிபுரிந்த தொழில்நுட்ப கலைஞர்கள் சிலர் இணைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சிவகார்த்திகேயன் நடிப்பில் ரவிக்குமார் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் ‘அயலான்’. இந்த படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் கடந்த 3 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் இந்த படத்தில் பணிபுரிந்த ‘அவதார்’ படத்தில் பணிபுரிந்த தொழில்நுட்ப கலைஞர்கள் சிலர் இணைந்து உள்ளதாகவும் இந்த படத்தின் கிராபிக்ஸ் பணிகளை அவர்கள் கடந்த சில மாதங்களாக செய்து வருவதாகவும் தகவல் வெளிவந்துள்ளது.

அடுத்த ஆண்டு வெளிவர வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படும் இந்த படத்தில் சிவகார்த்திகேயன் ஜோடியாக ரகுல் பிரீத்தி சிங் நடித்துள்ளார். மேலும் இந்த இஷா கோபிகர், யோகி பாபு உள்பட பலர் நடித்துள்ளனர். இசைப்புயல் ஏஆர் ரகுமான் இசையமைத்துள்ளார்.

# நீண்ட இடைவேளைக்கு பிறகு ராங்கி



இயக்குனர் எம்.சரவணன் இயக்கத்தில் திரிஷா நடிப்பில் உருவாகியுள்ள ‘ராங்கி' திரைப்படம் படம் ராங்கி. நீண்ட இடைவேளைக்கு பிறகு திரையரங்குகளில் வெளியாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எங்கேயும் எப்போதும், இவன் வேற மாதிரி, வலியவன் படங்களை இயக்கி பிரபலமடைந்தவர் இயக்குனர் எம்.சரவணன். இவர் இயக்கத்தில் திரிஷா நடிப்பில் தயாராகி உள்ள படம் ‘ராங்கி'.

இப்படத்தை தணிக்கை குழுவுக்கு அனுப்பிவைத்தனர். படத்தை பார்த்த தணிக்கை குழு உறுப்பினர்கள் நிறைய சர்ச்சை காட்சிகள் இருப்பதாக ஆட்சேபம் தெரிவித்து அனுமதி வழங்க மறுத்துவிட்டனர்.

இதையடுத்து படத்தை மேல்முறையீட்டு குழுவுக்கு கொண்டு சென்றனர். அங்கும் குறிப்பிட்ட காட்சிகளை நீக்கினால்தான் அனுமதி தர முடியும் என்று தெரிவித்து விட்டனர்.

இதையடுத்து படத்தில் இடம்பெற்ற அமெரிக்கா, டாலர், லிபியா, ரா உளவு அமைப்பு, எப்.பி.ஐ உள்ளிட்ட பெயர்கள் இடம்பெற்ற 30 காட்சிகளை நீக்கி விட்டு தணிக்கை குழு ‘யுஏ' சான்றிதழ் வழங்கியது.

இந்நிலையில் இப்படத்தின் வெளியீட்டு திகதி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி 3 வருடங்களுக்கு பிறகு இப்படம் வருகிற டிசம்பர் 30 திரையரங்குகளில் வெளியாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை

# ராகுலுடன் இணையும் கமல்

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, ‘இந்திய ஒற்றுமை பயணம்’ என்ற பெயரில் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை, பாதயாத்திரையொன்றை மேற்கொண்டு வருகின்றார்.

அந்தவகையில் கன்னியாகுமரியில் கடந்த செப்டம்பர் மாதம் 7ஆம் திகதி தொடங்கிய இப்பாத யாத்திரையானது தற்போது 100ஆவது நாளை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப் பாதயாத்திரையில் மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன் பங்கேற்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி புதுடெல்லியில் வரும் 24 ஆம் திகதி நடைபெற உள்ள பாதயாத்திரையில்




கமல்ஹாசன் பங்கேற்க உள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மதுரை

## கண்ணாடிப் பெட்டிக்குள் மோடி

மதுரை, அழகப்பன் நகர் பகுதியில் உள்ள பிரபல தனியார் கடை ஒன்றில் பார்பி கேர்ள், புர்கா அணிந்த இஸ்லாமிய பெண்கள், இராணுவ வீரர்கள், புடவை கட்டிய பெண்கள், அரேபியர்கள் போன்ற வித்தியாசமான பொம்மைகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.



குறிப்பாக இக்கடையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பொம்மையானது மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

தலைப்பாகை ,தாமரைச் சின்னம் ,காவி நிறை ஆடை ஆகியவற்றுடன் காட்சியளிக்கும் குறித்த பொம்மையானது இந்திய மதிப்பில் 1554 .00 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ராமநகர்

## தம்பியின் உயிரைப் பறித்த சிறுவன்

ராமநகர் மாவட்டம், கனகபுரா கிராமத்தைச் சேர்ந்தவர் ‘மல்லேஷ்‘. விவசாயியான இவருக்கு சொந்தமாகத் தோட்டமொன்று உள்ளது.

குறித்த தோட்டத்தில் கணவன் ,மனைவியென இருவர் பணிபுரிந்து வந்துள்ளனர். இவர்களுக்கு 16 மற்றும் 7 வயதில் இரு மகன்மார்கள் உள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை, மல்லேசின் தோட்டத்தில் குறித்த தம்பதியினர் பணிபுரிந்து செய்துகொண்டிருந்த போது அங்கு சிறுவர்கள் விளையாடிக் கொண்டு இருந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சந்தர்ப்பத்தில் தோட்டத்தில் உள்ள பண்ணை வீட்டிற்குள் சென்ற சிறுவர்கள் இருவரும் அங்கு சுவரில் தொங்க விடப்பட்டு இருந்த நாட்டு துப்பாக்கியை எடுத்து விளையாடிக் கொண்டு இருந்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இதன்போது அண்ணன் எதிர்பாராதவிதமாக டிரிக்கரை அழுத்திய நிலையில் அதிலிருந்து வெளியேறிய குண்டு தம்பியின் மீது பாய்ந்ததில் சம்பவ இடத்திலேயே தம்பி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றாமல் துப்பாக்கியை வீட்டில் வைத்திருந்ததாகக் கூறி மல்லேஷ் மீது வழக்குப்பதிவு செய்து கைது செய்துள்ளனர்.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பீகார்

## மது அருந்திய 82 பேர் மரணம்

பீகாரில் சாப்ரா என்ற பகுதியில் அண்மையில் கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 82 ஆக அதிகரித்துள்ளது.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



இந்நிலையில் கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என பாரதிய ஜனதா கட்சிஎம்.பி சுஷில் குமார் மோடி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரவிக்கையில்”பீகாரின் கோபால்கஞ்ச் மாவட்டத்தில் கடந்த 2016 ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் பருகிய 19 பேர் உயிரிழந்தனர். மேலும், 6 பேர் கண் பார்வை இழந்தனர். இவ் வழக்கில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இந்திய மதிப்பில் தலா 4 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டது.

இதேபோல் சாப்ராவில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஏன் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவில்லை” இவ்வாறு அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மராட்டிய மாநிலம்

## சிறுமி மீது 12 மணி நேரம் கூட்டு பாலியல் வன்புணர்வு

மராட்டிய மாநிலம், பல்கர் மாவட்டத்தைச் சேர்ந்த 16 வயதான சிறுமியொருவர் 8 பேர் கொண்ட கும்பலால் சுமார் 12 மணி நேரம் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த சிறுமி , இளைஞர் ஒருவரைக் காதலித்து வந்த நிலையில், சிறுமியை அவ் இளைஞன் கடந்த 16 ஆம் திகதி ஆள்நடமாட்டமற்ற பங்களாவொன்றுக்கு அழைத்துச் சென்று பாலியல் பலாத்காரம் புரிந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அதுமட்டுமல்லாது அங்கு வந்த இளைஞர்களின் நண்பர்களும் அச்சிறுமியை தொடர்சியாக 12 மணிநேரம் கூட்டுப்பாலியல் வன்புணர்வு செய்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் அவர்களிடம் இருந்து தப்பித்துச் சென்ற சிறுமி, தனக்கு நேர்ந்த கொடூர சம்பவம் குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.



இதனையடுத்து குறித்த இளைஞர்களைப் போக்சோ சட்டத்தில் கைது செய்துள்ள பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மத்திய பிரதேசம்

## கணவரைவிட்டு காதலனுடன் சென்றதால் நேர்ந்த கொடுமை

மத்தியபிரதேச மாநிலம், ராட்லம் மாவட்டத்தைச் சேர்ந்த 30 வயதான பெண்ணொருவர் தனது கணவரின் வீட்டை விட்டு வெளியேறி, தனது காதலனுடன் வசித்து வந்துள்ளார்.

அதேசமயம் கணவரின் குடும்பத்தினர் அழைத்தபோதும் குறித்த பெண் வர மறுத்ததால் அவர்கள் வசித்த வீட்டை விட்டுகணவரும், அவருடைய குடும்பத்தினரும் வேறு வீட்டில் வசிக்கத் தொடங்கியுள்ளனர்.

இதனையடுத்து அவ்வீட்டில் வசிப்பதற்காக அப் பெண்ணும் அவரது காதலனும் சென்றுள்ள நிலையில், அப்பகுதி மக்கள் இது குறித்து அப்பெண்ணின் கணவருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.



இதனையடுத்து சம்பவ இடத்திற்கு தனது நண்பர்கள் 7 பேருடன் வந்தகணவர் , அவர்கள் இருவரது கைகளையும் கட்டி, தடியால் கொடூரமாகத் தாக்கி வீதியில் ஊர்வலமாக அழைத்துச் சென்றுள்ளார்.

இதற்குள் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் இருவரையும் மீட்டு வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர்

அத்துடன் அப்பெண்ணின் கணவர் உட்பட 8 பேர் மீது வழக்குப்பதிவு விசாரணை நடத்தி வருகின்றனர்.



மப்பேயின் பிரான்ஸை வீழ்த்தி

# சம்பியனானது மெஸ்ஸியின் ஆர்ஜென்டீனா

கட்டாரில் நடைபெற்று வந்த கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில் ஆர்ஜென்டீனா சம்பியனானது.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில், பெனால்டியில் பிரான்ஸை வீழ்த்தியே ஆர்ஜென்டீனா சம்பியனானது.

இப்போட்டியின் வழமையான நேரத்தில் போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்ததுடன், மேலதிக நேரத்தில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்று மீண்டும் 3-3 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தன. பிரான்ஸ் சார்பாகப் பெறப்பட்ட மூன்று கோல்களையும் கிலியான் மப்பே பெற்றதோடு, ஆர்ஜென்டீனா சார்பாக லியனல் மெஸ்ஸி இரண்டு கோல்களையும், ஏஞ்சல் டி மரியா ஒரு கோலையும் பெற்றனர்.

அந்தவகையில் பெனால்டியில் 4-2 என்ற ரீதியில் வென்றே ஆர்ஜென்டீனா மூன்றாவது முறையாக சம்பியனானது. இதில் ஆர்ஜென்டீன கோல் காப்பாளர் எமிலியானோ மார்டினெஸ் ஒரு உதையைத் தடுத்ததுடன், பிரான்ஸின் இன்னொரு உதையானது கோல் கம்பத்துக்கு வெளியே சென்றிருந்தது.

இத்தொடரின் நாயகனாக மெஸ்ஸியும், இளம் வீரராக என்ஸோ பெர்ணாண்டஸும், சிறந்த கோல் காப்பாளராக மார்டினெஸும் தெரிவாகினர். கடந்த 2014ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்திலும் தொடரின் சிறந்த வீரராகத் தெரிவாகியிருந்த மெஸ்ஸி, இவ்விருதை இரண்டாவது தடவை வென்ற முதலாமவராக தனது பெயரைப் பதிந்து கொண்டார். தொடரில் அதிக கோல்களைப் பெற்றவர்களுக்கான தங்கப் பாதணியை மப்பே பெற்றுக் கொண்டார். தொடரின் இரண்டாவது சிறந்த வீரராக மப்பேயும், மூன்றாவது சிறந்த வீரராக குரோஷியாவின் லூகா மோட்ரிச்சும் தெரிவாகினர். தொடரில் அதிக கோல்கள் பெற்றவர்கள் பட்டியலில் இரண்டாமிடத்தில் லியனல் மெஸ்ஸியும், மூன்றாமிடத்தில் ஒலிவியர் ஜிரூட்டும் காணப்பட்டிருந்தனர்.

இதேவேளை இப்போட்டியுடன் உலகக் கிண்ணத் தொடரில் அதிக போட்டிகளில் விளையாடியவர் என்ற சாதனையையும் 26 போட்டிகளில் விளையாடி மெஸ்ஸி ஏற்படுத்தியிருந்தார்.

## ஆர்ஜென்டீனாவுக்காக தொடர்ந்து விளையாடவுள்ள மெஸ்ஸி

சர்வதேச கால்பந்தாட்டத்திலிருந்து ஓய்வு பெறப் போவதில்லை என ஆர்ஜென்டீனாவின் அணித்தலைவர் லியனல் மெஸ்ஸி தெரிவித்துள்ளார்.

தான் தேசிய அணியில் இருப்பதில் மகிழ்ச்சியடைவதாக கூறிய 35 வயதான மெஸ்ஸி, உலக சம்பியனொருவராக சில போட்டிகளில் அனுபவிப்பதற்காக தொடர்ந்து விளையாட விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக கட்டாரே தனது இறுதி உலகக் கிண்ணம் என முன்னர் மெஸ்ஸி குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், 2026ஆம் ஆண்டு தொடருக்கு தனது குழாமில் மெஸ்ஸியை வேண்டுவதாக ஆர்ஜென்டீனாவின் பயிற்சியாளர் லியனல் ஸ்கலோனி தெரிவித்துள்ளார்.



சவாட் கிக் பொக்ஸிங்கில்

## முதலிடம் பெற்ற கண்டி மாணவர்கள் கௌரவிப்பு

■ நவி

சவாட் கிக் பொக்ஸிங் குத்துச்சண்டை விளையாட்டுப் போட்டியில் கண்டி மாவட்டம் முதலாமிடத்தைப் பிடித்தது.

இரத்தினபுர பிரதேசத்தில் அண்மையில் நடைப்பெற்ற சவாட் கிக் பொக்சிங் விளையாட்டுப் போட்டியில் ஒன்பது மாகாணத்திலுள்ள விளையாட்டு வீர, வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தனர்.

சவாட் கிக் பொக்சிங் பயிற்றுவிப்பாளர் டி.எம். நவுசாட் தலைமையில் மத்திய மாகாணத்திலிருந்து 49 மாணவர்கள் பங்கு பற்றி இருந்தனர்.

இதில் 38 மாணவர்கள் வெற்றி பெற்று 38 பதக்கங்களைப் பெற்று வெற்றி சூடியிருந்தனர்.

27 தங்கப் பதக்கங்கள், எட்டு வெள்ளிப் பதக்கங்கள், மூன்று வெண்கலப் பதக்கங்களை இம்மாணவர்கள் கைப்பற்றியுள்ளனர்.

இந்த தேசிய விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி மத்திய மாகாணமானது முதலிடத்தைப் பெற்று சவாட் கிக் பொக்ஸிங் சம்பியன்ஷிப் பெற்று வெற்றியிடத்தைப் பெற்றது.

இரண்டாமிடத்தை ஊவா மாகாணம், மூன்றாமிடத்தை அம்பாந்தோட்டை பிரதேசம் கைப்பற்றியது.

இந்த வெற்றியை கொண்டாடுவதற்கு ஆக விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றிய மாணவர்களின் பெற்றோர்கள் நேற்று முன்தினம் மதியம் அந்த மாணவர்களை கௌரவிக்கு முகமாக வாகனங்களின் கம்பளை நகர் முழுவதும் பேரணியாக சென்று இருந்தனர். இதன் போது கம்பளை மக்கள் உற்காக வரவேற்பு செய்தனர்.

எல்.பி.எல்:

## தம்புள்ள ஓறாவை வீழ்த்திய கண்டி

லங்கா பிறீமியர் லீக்கில் (எல்.பி.எல்), கொழும்பில் 18ஆம் திகதி இரவு நடைபெற்ற தம்புள்ள ஓறாவுடனான போட்டியில் கண்டி பல்கொன்ஸ் வென்றது. இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பல்கொன்ஸின் துடுப்பெடுத்தாடியது.

அஷேன் பண்டாரவின் 37 (31), கவின் பண்டாரவின் 27 (16) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மத்தியூ போர்டே 3-0-16-2, சிகண்டர் ராசா 4-0-26-1, நூர் அஹ்மட் 4-0-24-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 161 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஓறா, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 121 ஓட்டங்களையே பெற்று 39 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், சிகண்டர் ராசா 45 (33) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஒஷேன் தோமஸ் 4-0-15-3, பேபியன் அலென் 4-0-23-2, ஸஹூர் கான் 3-0-16-1, வனிடு ஹஸரங்க 3-0-18-1, சாமிக கருணாரத்ன 2-0-14-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக ஒஷேன் தோமஸ் தெரிவானார்.

இந்நிலையில், முன்னதாக நடைபெற்ற கோல் கிளாடியேட்டர்ஸுடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான ஜஃப்னா கிங்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஜஃப்னா கிங்ஸ்

ஜஃப்னா கிங்ஸ்: 170/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: அஃபிஃப் ஹொஸைன் 54 (35), சதீர சமரவிக்கிரம 32 (28), திஸர பெரேரா 26 (13), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 23 (19), அவிஷ்க பெர்ணாண்டோ 18 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: நுவான் துஷார 2/31 [4], இமாட் வஸீம் 0/18 [3], இஃப்திஹார் அஹ்மட் 0/22 [3])

கோல் கிளாடியேட்டர்ஸ்: 154/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: குசல் மெண்டிஸ் 58 (45), இஃப்திஹார் அஹ்மட் 23 (19), நுவனிடு பெர்ணாண்டோ 22 (11), இமாட் வஸீம் 14 (10) ஓட்டங்கள். பந்துவீச்சு: பினுர பெர்ணாண்டோ 3/20 [4], விஜயகாந்த் வியாஸ்காந்த் 2/27 [4], மகேஷ் தீக்ஷன 1/18 [4], டுனித் வெல்லலாகே 0/15 [2], திஸர பெரேரா 0/15 [2])





தாய்லாந்து

## நடுக்கடலில் மூழ்கிய போர் கப்பல்: 31 பேர் மாயம்

தாய்லாந்து இராணுவத்திற்கு சொந்தமான போர்க்கப்பலொன்று நேற்று முன்தினம் (18) சுமார் 106 இராணுவ வீரர்களோடு தாய்லாந்து வளைகுடா பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளது.

இதன்போது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட புயல் காற்றினால் குறித்த கப்பலானது நடுக்கடலில் மூழ்கத்தொடங்கியுள்ளது.

இதனையடுத்து தகவலறிந்து சம்பவ இடம் விரைந்த மீட்பு படையினர் அக்கப்பலில் இருந்த 75 பேரை மீட்டுள்ளனர்.

இந்நிலையில் 31 வீரர்கள் மாயமாகியுள்ளனர் எனவும், அவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்கா

## பதவி விலகும் எலோன் ?

உலகின் பெரும் பணக்காரர்களில் ஒருவரான எலோன் மஸ்க் டுவிட்டர் நிறுவனத்தை கைப்பற்றியதிலிருந்து, அதில் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

குறிப்பாக டுவிட்டர் நிறுவனத்தின் தலைமை செயற்பாட்டு அதிகாரி- பராக் அகர்வால் உட்பட முக்கிய பதவிகளில் கடமையாற்றி வந்த பலரை பணிநீக்கம் செய்தார்.

அத்துடன் டுவிட்டரில் அதிகாரபூர்வக் கணக்குகளுக்கு வழங்கப்படும் 'நீல வண்ண டிக் குறியீட்டினைப் பயன்படுத்துவதற்கு 8 டொலர்கள் வசூலிக்கும் திட்டத்தினையும் அமுல்படுத்தினார்.

அத்துடன் தனிப்பட்ட நபர்களின் தகவல்களை வெளியிடுவதாகக் கூறி, பிரபல ஊடகவியலாளர்களின் டுவிட்டர் கணக்குகளையும் முடக்கி வருகின்றார்.

இந்நிலையில் எலோன் மஸ்கின் இத்தகைய செயற்பாடுகள் மக்கள் மத்தியில் மன உளைச்சலை ஏற்படுத்துவதாக ஐ.நாவின் உலகளாவிய தகவல் தொடர்புகளுக்கான துணைப் பொதுச்செயலாளர் மெலிசா பிளவ்மிங் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து தற்போது "டுவிட்டரின் தலைமை நிர்வாக அதிகாரி பதவியில் இருந்து நான் விலக வேண்டுமா? "என்ற கருத்துக்கணிப்பை எலான் மஸ்க் தொடங்கியுள்ளார்.

இக் கருத்துக் கணிப்பின் படி 57.6 சதவீதத்திற்கும் அதிகமான பயனர்கள் 'ஆம்' என்றும், சுமார் 42.4 சதவீதம் பேர் 'இல்லை' எனவும் பதில் அளித்துள்ளனர்.

முன்னதாக, டுவிட்டரின் தலைமை நிர்வாக அதிகாரியாக நீண்ட காலம் பணியாற்ற விரும்பவில்லை எனவும், அவ்வேலைக்கு வேறு ஒருவரைக் நியமிப்பேன் என்றும் சூசகமாகத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டார்

## ஒட்டுமொத்த உலகமும் தேடியது இதைத்தான்




FIFA 2022 உலகக்கோப்பைத் தொடரானது கடந்த 20 ஆம் திகதி கட்டாரில் கோலாகலமாக ஆரம்பமாகி நேற்று முன்தினம்(18) நிறைவடைந்தது.

அந்த வகையில் விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் பிரான்ஸ் அணியை வீழ்த்தி ஆர்ஜென்டீனா அணி சம்பியனானது.

இப்போட்டியை உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான கால்பந்து ரசிகர்கள் நேரில் சென்றும் தொலைக்காட்சியிலும்,சமூக ஊடகங்களிலும் பார்வையிட்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியை தான் ஒட்டுமொத்த உலகமே கூகுளில் தேடியுள்ளதாக கூகுள் நிறுவனத்தின் தலைமை செயற்பாட்டு அதிகாரி சுந்தர் பிச்சை தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்லாது உலக கோப்பைக் கால்பந்து போட்டியின் இறுதி போட்டி குறித்த தேடல் தான் கடந்த 25 ஆண்டுகளில் அதிகமான டிராபிக்கைப் பதிவு செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான்

## பயங்கரவாதத் தாக்குதல் : 4 பேர் உயிரிழப்பு



பாகிஸ்தானின் வாரிஸ்தான் மாவட்டம், லாகி மர்வத் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையத்தின் மீது நேற்று முன்தினம் பயங்கரவாதத் தாக்குதலொன்று இடம்பெற்றுள்ளது.

இத் தாக்குதலில் கையெறி வெடிகுண்டுகள், ராக்கெட் லாஞ்சர்கள் ஆகியவை பயன்படுத்தப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, தாக்குதல் நடத்திய நபர்கள் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் 4 பொலிஸார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனவும், பலர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான்

## ஹிஜாப் விவகாரம்; பிரபல நடிகை கைது




`ஈரானில் அண்மையில் ஹிஜாப்பினை முறையாக அணியவில்லை` எனக் கூறி கைது செய்யப்பட்ட 'மஹ்சா அமினி' என்ற இளம்பெண் பொலிஸார் தாக்கியதில் உயிரிழந்தார்.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், ஈரான் அரசுக்கு எதிராக ஆயிரக்கணக்கானோர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் கடந்த 2 மாதங்களாக நடைபெற்ற போராட்டத்தில் போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்பு படையினர் தாக்கியதில் இதுவரை 500-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் அரசுக்கு எதிரான போராட்டத்தில் சுமார் 18,000 பேரைப் பொலிஸார் கைது செய்த நிலையில், அவர்கள் மீது விசாரணை நடத்தப்பட்டு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் அண்மையில் பாதுகாப்பு படை வீரர்களைக் கத்தியால் குத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்ட 2 பேருக்கு சமீபத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஈரானைச் சேர்ந்த புகழ்பெற்ற நடிகை தாரனே அலிதூஸ்டி போராட்டக்காரர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதை கண்டித்தும், அரசுக்கு எதிரான போராட்டத்தை ஆதரித்தும் கடந்த வாரம் இன்ஸ்டாகிராமில் பதிவு ஒன்றை வெளியிட்டார்.

அப்பதிவில் அவர் ஈரானின் மரண தண்டனைக்கு எதிராக பேசும்படி சர்வதேச அமைப்புகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில் போராட்டம் குறித்து பொய்யான தகவல்களைப் பரப்பியதாக குற்றம் சாட்டி நடிகை தாரனே அலிதூஸ்டியை ஈரான் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 20 டிசெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.